
www.tamilarangam.net

# மனிதம்



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## * 21 செப்டம்பர் 1989 *

அன்று தான்
துப்பாக்கிகளினால்
அடக்கப்பட்ட
கருத்துச் சுதந்திரத்தை
மீறிய குற்றத்திற்காக
அந்த நிலவு
சுட்டுப் பொசுக்கப்பட்டது

ஆயுதக் கலாச்சாரத்தால்
அமிழ்த்தி வைக்கப்பட்ட
ஒரு சமூகத்தில்
மௌனத்தினால் மட்டுமே
மரணத்தில் இருந்து
ஒதுங்கியோர் மத்தியில்
நியாயத்திற்காகவும்
மனித உரிமைக்காகவும்
குரல் கொடுத்துக் கொண்டிருந்த
ராஜினி என்கின்ற
அந்த விளக்கு
அணைக்கப் பட்டது.

எதற்காக இயங்குகிறேன்
என்பதை அறியாத
அந்தத் துப்பாக்கி
யாருடையதோ கட்டளை
நிறைவேற்றிய
பூரிப்பில் திளைத்தது.

நியாயங்களைப் புரிந்து
கொண்டோர் எல்லாம்
கதவுகளை தாழ்ப்பாள் போட்
அறைகளிலே மௌனமாகி

அந்த
நம்பிக்கை நட்சத்திரம்
சமூகத்தை நேசித்த
ஒரே குற்றத்திற்காக
வீழ்த்தப் பட்டது.

* குப்பிளான். ஜெகன் *

www.tamilarangam.net

# மனிதம்



மனிதம் மூன்றாவது ஆண்டில் தனது முதல் இதழை விரிக்கிறது. அது கடந்துவந்த இரண்டு ஆண்டுகளில் நாம் எதிர்நோக்கிய ஒருசில பிரச்சினைகளை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள நினைக்கிறோம். இப் பகிர்வு வாசகர்களுடனான பிணைப்பை மேலும் ஆழப்படுத்த உதவும் என்பது எமது நம்பிக்கை.

சமூகப் பொறுப்புள்ள சிறு பத்திரிகைகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் எம்மையும் தாக்குகிறது. இயல்பாக இப் பத்திரிகைகளின் ஒழுங்கான, தொடர்ச்சியான வருகைக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் நிதிநெருக்கடி எமக்கும் உண்டு. எந்த ஒரு உதவி நிறுவனத்தினதும் நிதி-யுதவியற்ற நிலையிலும் சமூக நலன் அடிப்படையிலான எமது கூட்டுழைப்பு இத்தகைய கஷ்டங்களிலிருந்து எம்மை விடுவித்திருக்கிறது. இந்நிலையில் ஐரோப்பாவில் வாழும் எம்மவர்-கள் பலர் வியாபார நோக்குடன் வரும் சினிமா சஞ்சிகைகளைத் தேடி ஒடுவதிலுள்ள ஆர்வம் ஐரோப்பிய தமிழ் சஞ்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிதைக்கிறது இல்லை என்பதை கவலையுடன் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. வாசகர்களின் விமர்சனங்கள் அரிதாக உள்ளது. பரந்தளவில் ஆக்கங்களை அனுப்புபவர்களின் தொகை குறைவு. இதுவும் சமூக நலனின் மீதான அக்கறையற்ற போக்கினையே வெளிப்படுத்துகிறது.

« ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பு » மனிதம் இக் கூற்றை அங்கீகரிப்பதில்லை. பத்திரிகையில் தாங்கி வருவதுமில்லை. இக் கூற்றை பத்திரிகைகள் பிரசுரிப்பதன் மூலம் ஆக்கங்களுக்குரிய பொறுப்பை ஆக்கதாரர்களிடமே முழுதாக விட்டுவிட்டு, தமது பொறுப்பை தட்டிக் கழிப்பதாக அர்த்தப்படுகிறது. இப் பார்வையினால் "மனிதம் ஒரு சிலரின் ஆக்கங்களை தொடர்ந்து பிரசுரிக்கிறது; ஏனைய ஆக்கதாரர்களின் ஜனநாயகத்தை மறுக்கிறது" என்று மதிப்பிடுவது தவறானதாகும்.

"ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பு" என்று கூறும் சமூகப் பொறுப்புணர்வுள்ள பத்திரிகைகள் கூட — உதாரணமாக யாழ் நகரில் இருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றியது சரியான நடவடிக்கை என்று ஒருவர் கட்டுரை வரைந்தால் அதை பிரசுரிக்கவா போகிறது. இந்த வகையில்தான் எமக்கென்றும் சில வரையறைகள் உண்டென்பதே உண்மை. சமூக நலனை நோக்கிய ஆக்கங்களையே பிரசுரிக்கிறோம்; தொடர்ந்தும் பிரசுரிப்போம்.

மேலும் மனிதத்தில் சிலர் உரிய பெயரிலும், வேறுசிலர் புனைபெயரிலும் ஆக்கங்களை எழுதுகின்றனர். இதில் சொந்தப் பெயரில் எழுதமுடியாததற்குரிய எமது சூழ்நிலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யின் நெருக்கடியை நினைத்து நாம் வேதனையடைய வேண்டும்.

இன்றும், சில குறும் உள்ளங்கள் மனிதம் உட்பட ஐரோப்பிய தமிழ் சிற்றிதழ்கள் பலவற்றுக்கு ஆக்கங்களை அனுப்பிவைக்கின்றனர். அவ் ஆக்கங்களின் குறைகளை அவ் எழுத்திலேயே புரிந்துகொள்வர் வாசகர். இதை விட நாமே எழுதிவிட்டு 'எழுத்திலிருந்து' என குறிப்பிடுவதாக கூறுவது கண்டிக்கத்தனமானது.

✲ ✲✲ ✲✲✲ ✲✲ ✲

ராஜினி திரணகம படுகொலை செய்யப்பட்டு இன்று இரண்டு ஆண்டுகள்! கருத்துச் சுதந்திரத்திற்கு வைக்கப்பட்ட ஆழமான வெட்டுகளில் இதுவும் ஒன்று. ராஜினி போன்ற இன்னும் பல ஜனநாயக சக்திகளை இவ் வெட்டுக்கள் துரத்திக்கொண்டிருக்கிறது. இச் சந்தர்ப்பத்தில் ராஜினியுடன் கூடவே எழுத்தில் கருத்துச் சுதந்திரம் பறிபோனதற்கும், இயக்க அராஜகங்கள் மேலோங்கியதற்கும் சிறந்த ஜனநாயகக் கோரிக்கைக்காக குரல் எழுப்பத் தவறுகின்ற, உயர் மானிட விழுமியங்களை அடைவதற்காக போராடத் தயங்குகின்ற இறுகிய மனப்பான்மையுடன் கூடிய சமூகப் பண்புகளும் முக்கிய காரணம் என்பதை நினைவுபடுத்திக் கொள்வோம்.

முன் அட்டைப்படம்

மூலம் : THE BROKEN PALMYRA

www.tamilarangam.net



# இலங்கை அரசில் சலசலப்பு

« பயந்த காலம் மலையேறிவிட்டது.
ஜனநாயகத்தைக் காப்பாற்ற வாருங்கள்
இனியாவது மனச்சாட்சிப்படி நடப்போம் »

என ஒரு நாட்டின் அமைச்சர்களை கூக்குரல் போட வைக்கும் ஒரு ஆட்சியின்கீழ்தான் இலங்கை மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிரேமதாசாவின் எதேச்சாதிகாரப் போக்கை நிச்சயப்படுத்திய நிகழ்வு கடந்த மாத இறுதியில் நடந்தது. ஜனாதிபதிமீது 'அரசியல் குற்ற விசாரணை' நடத்தக்கோரி சபாநாயகரிடம் மனுவொன்று கையளிக்கப் பட்டதும் அரசு இயந்திரத்துள் சலசலப்பு ஏற்பட்டது. ஆளும்கட்சி (45 எம்.பிக்கள்), எதிர்க்கட்சி எம்.பிக்கள் என மொத்தம் 120 பேர் இதில் கையெழுத்திட்டிருந்தனர்.

« ஜனாதிபதியை பதவியிலிருந்து அகற்றவேண்டும்;
நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை
நீக்கப்பட்டு பாராளுமன்ற ஆட்சிமுறை மீண்டும்
கொண்டுவரப்பட வேண்டும். »

என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ஆளும் கட்சியின் அதிருப்தியாளர் குழு என வர்ணிக்கப்படும் லலித் (கல்வி-உயர்கல்வி அமைச்சர்), GM பிரேமச்சந்திரா (தொழிலமைச்சர்), காமினி திசாநாயக்கா உட்பட 8 உறுப்பினர்களும், சிறிமா, அநுரா, வாசு உட்பட எதிர்க்கட்சிகளும் (ஸ்ரீ.ல.சு.க, ம.ஐ.மு, ஐ.சோ.மு, EPRLF) பகிரங்கமாகவே இப் 'போராட்டத்தில்' ஈடுபட்டுள்ளனர். லலித், பிரேமச்சந்திரா இருவரும் தமது அமைச்சர் பதவிகளை

www.tamilarangam.net



இராஜினாமாச் செய்தனர். UNP யின் எம்.பிக்கள் சிலர் தாம் மனுவை வாசிக்காமல் கையெழுத்திட்டுவிட்டோம் என நம்பும்படி கூறியதாக பிரேமதாசா விடும் கதை எந்தளவு உண்மையென தெரியவில்லை.

அவசர அவசரமாக அலரிமாளிகையில் கூட்டப்பட்ட ஆளும் கட்சி எம்.பிக்களின் குழுக் கூட்டத்தில் பிரேமதாசாவுக்கு ஆதரவான கையெழுத்து வேட்டை நடந்ததும், பிரேமதாசா தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி Sep. 3 கூடவேண்டிய பாராளுமன்றக் கூட்டத்தை Sep. 24 க்கு பின்போடப்பட்டதும் குறிப்பான செய்திகளாகும். இவ் இடைக்காலத்தில் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ள பிரேமதாசா சகல வழிகளிலும் முயல்வார். அதேநேரம் லலித், காமினி கோஷ்டிக்கு எதிரான அரசியல் பழிவாங்கலும் எடுக்கப்பட்டுள்ளது. இந்த 'அதிருப்தியாளர்கள்' எட்டுப்பேரும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்கள். இதனால் எம்.பி பதவியும் பறிபோனது. நாட்டையும் ஜனநாயகத்தையும் காக்க கட்சிக்குள் இருந்தே நாம் போராடப்போவதாக இவர்கள் குரலெழுப்பியபோது, கட்சியிலிருந்தே நீக்கப்பட்ட அறிவிப்பும் பிரேமதாசா அரசிடமிருந்து வந்தது.

தன்னை பதவியிலிருந்து அரசியலமைப்பின் பிரகாரமே நீக்கமுடியும் என்கிறார் பிரேமதாசா. அது அவ்வளவு சுலபமானதல்ல. ஜனாதிபதியிடம் நிறைவேற்று அதிகாரங்களைக் குவிக்கும் வகையில் வரையப்பட்ட அரசியல் சட்டம் ஜனாதிபதியை அகற்ற எளிதாக வழிவிட்டுப் போவதில்லை. ஜனாதிபதியை பதவியிலிருந்து நீக்கக் கோரும் மனுவை 2/3 பெரும்பான்மையினர் ஆதரிக்கவேண்டும். சபாநாயகர் அதனை அரைவாசி உறுப்பினர்களின் ஆதரவுடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உயர்நீதிமன்ற பரிசீலனைக்கு அனுப்புவார். நீதிமன்றம் அதை நிராகரிக்கலாம். இல்லை எனின் மீண்டும் 2/3 பெரும்பான்மை வாக்குகளால் பாராளுமன்றத்தின் அங்கீகரிக்கப்பட வேண்டும். இதன்பின்னரே ஜனாதிபதி பதவியிலகுவார். இந்த அரணை உடைத்து ஜனாதிபதியை பதவி நீக்குவதில் - அதுவும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு எம்.பி பதவி பறிபோன நிலையில் - ஏற்படும் சாத்தியப்பாடுகள் குறைவாகவே உள்ளன.

இந்த அரசு இயந்திரத்தின் பாதுகாவலராக உள்ள முப்படைகளின் தளபதிகளும், பொலிஸ் மா அதிபரும் பிரேமதாசாவுக்கு பூரண ஆதரவு தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. அஸ்கிரிய மல்வத்தை பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களும் ஆதரித்துள்ளனர்.

மேலும் இந்த அரசியல் குற்ற மனுவை கொண்டு வந்தவர்கள்மீது மக்களுக்கு சந்தேகங்கள் உள்ளன. ஏனெனில் இந்த அரசியல் அமைப்புமுறை 1977 இல் JR இனால் கொண்டுவரப்பட்டபோது லலித், காமினி ஆகியோர் இதில் முக்கிய பங்காற்றியிருந்தனர். இன்று அதற்கெதிராக 'போர்க்கொடி' தூக்குகின்றனர். எனவே இதுதொடர்பாக தமது தவறுகளை மக்கள்முன் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. இரண்டாவதாக, இவர்கள் இருவருமே பிரேமதாசாவால் அர-சியல் அரங்கில் பழிவாங்கப்பட்டவர்கள். அவர்கள் எதிர்பா-ர்த்த பதவி கொடுக்கப்படவில்லை. இந்த வகையில் பிரேமதாசா மீதான பதில் பழிவாங்கலாக இது இருக்கலாமோ என்ற சந்தேகம் எழவும் வாய்ப்பு உண்டு. மூன்றாவதாக, ஸ்ரீலங்கா சு.கட்சி பதவிப்போட்டிக்கான குத்துவெட்டுக்கள் இழுபறிப்பட்டுக் கொண்டிருந்தவிட்டு திடீரென ஜனாதிபதி

www.tamilarangam.net



ஆட்சிக்கு எதிராக ஏதோ தாம் ஒற்றுமைப்பட்டு இயங்குவ தாக காட்டிக்கொள்வதும் அவர்கள்மீது மக்களை சந்தேகத்துடன் நோக்க வைத்துள்ளது. இவையெல்லாமே பதவிப் போட்டிக்கான களமோ என்ற பலமான ஊகத்தையும் கிளப்பியுள்ளது. உண்மையில் ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிரான நடவடிக்கையாக இது இருக்குமானால் மக்களி-டம் எழும் இந்த சந்தேகங்கள், ஊகங்கள் தெளிவாக்கப்படும் பொறுப்பு இவர்களிடம் உள்ளது. இதை செய்யத் தவறும் நிலையில் ஜனாதிபதி ஆட்சிமுறை பற்றிய சர்வஜன வாக்கெடுப்புக்கூட இவர்களை கைகழுவிவிடும் நிலை ஏற்படலாம்.

அரசுக்குள் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியின் மூலாதாரமே நாடு எதிர்நோக்கியிருக்கும் மீளமுடியாத பிரச்சினைகளின் தாக்கமாகும். முதன்மையான பிரச்சினை-யாக பூதாகாரமாக உருவெடுத்திருக்கும் தேசிய இனப் பிரச்சினை, தமிழ் மக்கள் மீதான அரசின் பாசிச நடவடிக்கைகள் என்பனபற்றி இந்த 'அதிருப்தியாளர்கள்' என்ன சொல்கிறார்கள். UNP அரசின் பயங்கரவாதத்துக்கு அமைச்சராக இருந்து லலித் ஆற்றிய பங்கும் காமினியின் இனவெறிப் பாத்திரமும் தமிழ் மக்கள் இலேசில் மறந்துவிடக் கூடியவை அல்ல! இப்போதுகூட லலித் தனது அமைச்சில் சரியாக செயற்படவில்லை என்ற பிரேமதாசாவின் முன்னைய குற்றச்சாட்டை மறுதலித்து அளித்த பதிலில் தனது ஆட்சியில் புரிந்த சாதனையாக எதைக் காட்டுகிறார். தான் ஆட்சிக்கு வந்த காலத்தில் தான் கடற்படையை பலப்படுத்தி வடபகுதி யுத்தத்தில் ஈடுபடுத்திய விபரங்களை சொல்லி மார்தட்டினார்.

www.tamilarangam.net



தமிழ் மக்கள் நம்பிக்கையுடன் பார்க்கும்படியாக எதுவுமே இல்லை. அவர்கள் வழமைபோல் விமானத்தாக்குதலுக்கும் செல்லடிகளுக்கும் முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அவலங்களை தாங்கமுடியாமல் நலிந்து போனார்கள். புலிகளை அரசுடன் பேசுமாறு வேண்டுகோள் விடுக்கும் சுவரொட்டிகள் அவர்களின் மனநிலையை படம்பிடித்தன. புலிகளும் அரசுக்கு அழைப்பு விடுத்தனர். இனப்பிரச்சினை சம்பந்தமாக பேச பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றும் (எதிர்க்கட்சிகள் உட்பட) தெரிவு செய்யப்பட்ட செய்தியும் மக்களின் எதிர்பார்ப்பை சற்று அதிகரித்தது. பேச்சுவார்த்தைக்கான ஒரு சூழல் உருவாவதுபோல் தெரிந்த இந் நேரத்தில் 'அரசியல் குற்ற மனு' விவகாரம் எழுந்துள்ளது. இப் பேச்சுவார்த்தையால் பிரச்சினை தீரும் என்று தமிழ்மக்கள் நினைக்கிறார்களோ இல்லையோ, ஒரு அமைதி சூழலை சிறிது காலத்துக்காவது விரும்புகிறார்கள். உடனடி தேவைகளுடன்கூடவே உளவியல் தேவை (மன அமைதி) யும் நிறைவேறலாம் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

இதையெல்லாம் எமது 'விடுதலை இயக்கங்கள்' எந்தளவில் உணர்ந்துள்ளன என்ற கவலை தமிழ்மக்களிடம் உள்ளது. EPDP டக்ளஸ் தேவா "ஜனாதிபதியின் கரத்தை வலுப்படுத்துவோம்" என்றதுடன் நிற்கவில்லை. ஏதோ சோவியத் யூனியனில் அண்மையில் நடந்த 'அரண்மனைச் சதி' முயற்சி போல கற்பனை பண்ணி பிரேமதாசாவின் 'பகிரங்கத்தன்மை' (கிளாஸ்நோஸ்ட்) க்கு எதிராக எழுந்த சதி என பிதற்றியுள்ளார்.

www.tamilarangam.net



இந்திய அரசின் விசுவாசத்தால் இலங்கை அரசின் அரவணைப்பை இழந்த EPRLF லலித் கொஸ்தியுடன் நிற்கிறது. இவர்கள் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தும் முன்நிபந்தனைகளைக் கூட வைக்காமல் இப்படி ஆதரவு தெரிவிப்பதின் உள்நோக்கம் புரிந்துகொள்ளக் கூடியது. PLOT வழமைபோல் இரண்டுக்கும் இடை-யான ஒரு போக்கில் 'நிலைப்பாட்டை' தெரிவித்துள்ளது. 1991 யூலை சர்வகட்சி மாநாட்டிலேயே நாம் இந்த அரசியல் அமைப்பின் மாற்றம் கோரியிருந்ததாக ஒரு-புறமும், பிரேமதாசா இனப் பிரச்சினையை தீர்க்க முயற்சி எடுத்ததையும் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு எதிர்க்கட்சி உறுப்பினரை தலைமைதாங்க தெரிவுசெய்ததையும் நினைவுபடுத்தவேண்டும் என்று இன்னொரு புறமும் முரணாக கூறியது. இவர்கள் இந்த அரசியல் அமைப்பில் முன்னர் ஏன் மாற்றம் கோரினார்கள்? இந்த அமைப்பு முறையால் பிரச்சினைகளை தீர்க்க முடி-யாது என்பதால்தானே! இப்போ இந்த அமைப்பு முறைக்குள் பிரச்சினைகளை தீர்க்கமுடியும் என நம்புகிறார்களா?

புலிகளால் விழுங்கப்பட்ட ஈ.ரோஸின் எஞ்சிய தலைவர்கள் இரத்தினசபாபதியும் சங்கரும் கட்சியை புனரமைக்கப் போவதாக கொழும்பு பறந்த சென்ற சில நாட்களுக்குள் இன்றைய நெருக்கடியும் எழுந்துள்ளது. 13 பாராளுமன்ற உறுப்பினர்களின் இடங்களையும் நிரப்பும் 'புனரமைப்பு வேலை' நடப்பதற்குள் இப்படியொன்று! இது அவர்களின் நிலை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த அமளிகளின் மத்தியிலும் தமிழ்மக்கள் மீதான தாக்குதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் மோசமாக நடைபெறுகிறது. இன்னொரு மிகப் பெரும் இராணுவத் தாக்குதல் அங்கு அரங்கேற்றப்பட்டிருக்கிறது. இதைக்கூட 'அதிருப்தியாளர்கள்' கண்டுகொள்ளவில்லை.

தனிநபருக்கு (ஜனாதிபதிக்கு) அதிகாரங்களைக் குவிக்கும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படுவது நல்லதுதான். ஏனெனில் இது பாசிசப் போக்கை உருவாக்குவதிலும் செயற்படுத்துவதிலும் வழிசமைத்துக் கொடுக்கிறது. பாராளுமன்ற ஆட்சிமுறை ஒப்பீட்டளவில் இப் போக்கை கட்டுப்படுத்துகிறது. மற்றபடி எதையும் தரப்போவதில்லை. தமிழ் மக்கள் தரப்பிலோ, அரசு இயந்திரத்தில் தோன்றியுள்ள இம்முரண்பாடுகளை பாவிக்கமுடியாத ஒரு கையறுநிலையை சரியான திசைவழியற்ற போராட்டப் பாதை தந்திருக்கிறது. தமிழ் மக்கள் நடப்பதை பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர அதற்கு மேலாக எதையும் செய்யும் ஆற்றலை இழந்துபோயுள்ளனர்.

-பாலமோகன்

******************************************************************************

வாசகர்களே!

உங்கள் ஆக்கங்களையும் விமர்சனங்களையும் எதிர்பார்க்கிறோம்

MANITHAM
POSTFACH 12
3000 BERN 11
SWITZERLAND

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ஏ தேசமே
நீ
நிர்வாணமாக்கப் படுகிறாய் !

உற்றுப் பார்
உனது கோவணம்
எத்தனை கைகளில்

தாய்ப்பால் பருகி
நிமிரும்
பிஞ்சுகளின்
முளைகளில் கூட
சின்னக் குவியல்கள்

வாலை மடக்கி ஓடும்
குட்டி நாய்க்குத்தான்
உன்
கூட்டுழற்குள் வழி

உன் வயல்களில்
மண்டை ஓட்டுப் பயிர்
தாராளமாய் வளர்ந்து கிடக்கிறது.

நீயோ
இன்னும்
மௌனமாய்

உற்றுப் பார்
உனது கோவணம்
எத்தனை கைகளில்

நீ
நிர்வாணமாக்கி
-கொண்டிருக்கிறாய் !

☼ ஆனந்தி ☼

www.tamilarangam.net





# திருந்தும் பொழுது

அருள்

(சென்ற இதழ் தொடர்)

ரகுவரனின் புதிய போக்கும் அவனுடைய நண்பர்களின் வி-த்தியாசமான தோற்றங்களும் நெஞ்சத்தை கவ்விக் கொள்ள அவன் வீடு நோக்கி நடக்கத் தொடங்கினான்.

நேற்று நடந்த அந்தச் சம்பவம் விட்டுவிட்டு வீசும் காற்றுப் போல மீண்டும் மீண்-டும் அவன் நினைவிற்கு வந்து சென்றது. நேற்றய சம்பவத்-தின் நினைவுகளில் ஆழ்ந்திரு-ந்தவன் இயல்பாகவே மீண்-டும் கிணற்றுக்கட்டடியில் தான் இருப்பதை உணரும் யதார்த்த நிலைக்கு திரும்பினான். தாய் இன்-னமும் குசினிக்குள் இருப்ப-தாகவே தோன்றியது. அது அவனுக்கு சந்தோசத்தை அளி-த்தது. மெதுவாக கிணற்றினு-ள் எட்டிப்பார்த்தான். மார்பு-க்கு மேற்பட்ட அவனது உடலின் விம்பம் நீரில் ஆடி ஆடித் தெரிந்தது. சிறிது நே-ரம் தனது விம்பத்தைப் பார்த்-துக்கொண்டிருந்தவன் பின்னர் கிணற்றுக்கட்டடியிலிருந்து இற-ங்கினான். அருகில் நின்ற நெ-ல்லிமரம் அப்போதுதான் கண்-ணுக்குத் தெரிந்தது. ஒரு தடி எடுத்து பிஞ்சு, காய், முற்றல் என்ற வகைப்படுத்தலின்றி உலுவிக் கொட்டினான். நன்கு முற்றிய மஞ்சள் நிறக் காய்களை மட்டும் தெரிந்து பொறுக்கிக்கொண்டு வீட்டுக்-குள் சென்றான். நாளை பாட-சாலை என்ற நினைப்பு வந்தது. நேரத்தைப் பார்த்தான். மாலை 5 மணி. புத்தகங்கள், கொப்-பிகள், மற்றய உபகரணங்கள் முதலியவற்றை அடுக்கி ஆய-த்தப்படுத்தி வைப்பதற்கு இ-ன்னமும் நேரமிருக்கிறது என்று நினைத்தவாறு விறாந்-தைக்கு வந்தான். பாதி கடி-த்த நெல்லிக்காய் ஒன்றை முற்றத்தில் நின்ற கோழி ஒன்றின் முன்னால் எறிந்தான். அது ஒருமுறை ஓடி வந்து கொத்திப்பார்த்து விட்டு இது எனக்குரிய உணவல்ல என்பது

www.tamilarangam.net



போல் அப்பால் நகர்ந்து சென்-றது. குட்டி சிரித்தான். "என்ன குட்டி சிரிக்கிறாய்?" குசினியி-லிருந்து வெளியே வந்துகொ-ண்டிருந்த தாய் கேட்டாள்.

"ஒண்டுமில்லை ...."

"ஒண்டுமில்லையெண்டாய்... சிரிக்-கிறாய் ...."

"இல்லை .. கோழி நெல்லிக்கா-யை தின்னுதாம் ...."

இப்போது அவனும் சிரித்தான்.

"ஏடா நல்ல ஆராய்ச்சிதான் பண்ணிறாய். அது சரி, உனக்கு எத்தினை நாள் சொன்னனான் நெல்லிக்காய் கனக்க தின்ன-தையெண்டு. பல்லுக்கொதி வந்-து அவதிப்படக்கேதான் தெ-ரியும்" சொல்லிவிட்டு வீட்-டிற்குள் நுழைந்தவள், ஏதோ ஞாபகம் வந்தவள் போல் திரும்பிக் கேட்டாள்.

"நாளைக்கு பள்ளிக்கூடத்தி-க்கு எல்லா ஆயத்தமும் பண்ணிப் போட்டியோ?"

"இல்லை ...."

"ம்... அதுகளை இன்னும் செய்-யேல்லை கோழி நெல்லிக்காய் தின்னுமோ எண்டு ஆராய்ச்சி பண்ணிறாய். போ! போய் உன்-ர வேலையைக் கவனி ...."

சொல்லிவிட்டு உள்ளே சென்றாள் அவள். அவன் இன்-னமும் திண்ணையிலேயே நின்-றான். அவன் நெஞ்சில் ஏதோ ஓர் எண்ணம் - அவனுக்கே புரியாத அல்லது அவன் சிந்-திக்க துணியாத - உருண்டுகொ-ண்டிருந்தது. அது என்னவெ-ன்று அடையாளம் காண்ப-தற்கு அவனால் முடியவில்லை. மண்கூட்டினுள் மறைந்தி-ருக்கும் புழு போல ஏதோ ஒன்று அவனுக்குள் மறைந்-திருந்தது. அந்த இனம் புரி-யாத எண்ணம் அபாயகர-மானதாகவும் தோன்றுகிறது. திகைப்புடன் கூடிய சந்தோ-சத்தையும் அளிக்கிறது. காற்-றாகிய பலூன் போல அவன் நெஞ்சம் முழுவதும் உணர்ச்சிப் பெருத்திருந்தது. நெஞ்சம் முழுவதும் முட்டி மோதுவது

www.tamilarangam.net


புயலா? தென்றலா? அச்சம், பரபரப்பு, திகைப்பு இவற்றுடன் இவற்றையெல்லாம் மேவிவருவதுபோல் ஓர் புதுமையான சந்தோசம். இந்த நிலைமை அவனுக்கு ஓர் வித்தியாசமான அனுபவம். முதல் முறையாக இப்படியொரு அனுபவத்தை பெறுகிறான். மனம் எதையோ விரும்புகின்றது. ஆனால் என்னவென்று புரியவில்லை. அல்லது, மூளை அதைப்புரிவதில் சுணக்கம் காட்டுகிறது......

இரவைக் கழிப்பதற்காக, சாத்திவைக்கப்பட்ட தடி ஒன்றின் மூலம் மரத்தில் ஏற முயற்சித்த கோழியொன்று வழுக்கி வேலியில் விழுந்து பின்னர் பலமாக சிறகுகளை அடித்தவண்ணம் பெருத்த பிரயத்தனத்துடன் பறந்து சென்று மரத்தின் கீழ்க் கிளையில் அமர்ந்தது. பின்பு ஒவ்வொரு கிளையாகத் தாவி மரத்தின் உச்சியில் சென்று ஆசுவாசமாக அமர்ந்து கொண்டது.

கோழியின் மரமேறும் முயற்சியில் உணர்ச்சிப் போராட்டங்களிலிருந்து திசை திரும்பியிருந்த குட்டிக்கு தன் மனம் எதை விரும்புகிறது என்பது இப்போது விளங்கியது. சாகசம் செய்ய வேண்டும். தன்னைப் பார்த்து எல்லோரும் பிரமிக்க வேண்டும். தலையில் குட்டி "ஓடு" என்று விரட்டும் பெரியவர்கள், வளர்ந்தவர்கள் தன்னைப் பார்த்து வியந்து நிற்க வேண்டும். தன்னைப் பற்றி வியந்து கதைக்க வேண்டும். தான் ஒரு வீரனாக வலம் வரவேண்டும். நெஞ்சில் கருக்கட்டியது வெளியில் பிரசவித்த பின்னர் உணர்ச்சிப் போராட்டமும் விடை பெற்றது. நெஞ்சில் வீசியது புயலல்ல.... தென்றல் தான். குட்டியின் முகம் மலர்ந்திருந்தது. சிரித்தான். அச்சிரிப்பில் குழந்தைத்தனமும் இருந்தது. இறுமாப்பும் இருந்தது. வீட்டிற்குள் சென்றான்.

மேசையருகே வந்து நின்றவன் அதில் ஒழுங்கின்றி சிதறிக் கிடந்த புத்தகங்களைப் பார்த்தான். அவை அவனுக்கு அந்நியமாகத் தென்பட்டன. இதுநாள் வரையிலும் அவன் அரவணைத்திருந்த அப்புத்தகங்களும் மற்றைய உபகரணங்களும் இப்போது தனக்கு சம்பந்தமில்லாதிருப்பது போல் உணர்ந்தான். சாமி அறைக்குள் தாயார் அம்மனை வணங்கிக் கொண்டிருப்பது மெல்லியதாய்க் கேட்டது. கூடவே, நாள் பாடசாலைக்கு எல்லா ஆயத்தங்களும் செய்து விட்டாயா என்று கேட்டதும் ஞாபகம் வந்தது. அந்நியமாகிப் போயிருக்கும் புத்தகங்கள், கசக்கத் தொடங்கியிருக்கும் பாடசாலை. இப்போது தாயாரின் அன்பும், அரவணைப்பும் கூட அவனுக்கு நச்சரிப்பும், இடையூறுமாக தோன்றியது. ஆனாலும் கையில் அகப்பட்ட புத்தகங்களையும், கொப்பிகளையும் புத்தகப் பையினுள் திணித்தான். சாப்பிடவும் மனம் இல்லை. பசிக்கவேயில்லை. ஆனாலும் தாயாரின் வற்புறுத்தலில் சிறிது சாப்பிட்டான். வெளியில் சென்று மிகுதியை கொட்டிவிட்டு கையை மட்டும் கழுவி தட்டை அடுத்தருகே வைத்தான். (அவன் தனியாக ஒரு தட்டில் சாப்பிடத் தொடங்கிய நாளில் இருந்து அதைக் கழுவுவது தாயாரின் வேலையாகவே இருந்து வருகிறது.) படுக்கையில் விழுந்தவன் கண்களை மூடாமலே கனவுகளில் மிதந்தான். தன் எண்ணத்திற்கு கற்பனையில் நீந்தியவனுக்கு தனது பெயர் ஞாபகம் வந்தது. தன் வீரச்செயல்களுக்கு "குட்டி" என்ற பெயர் பொருத்தமற்றதாகத் தோன்றியது அவனுக்கு. தன்னைப் பெரியவனாக வளரவிடாமல் இந்தக் "குட்டி" என்ற பெயர் தடுத்து

www.tamilarangam.net



விடுமோ என்ற அச்சம் அவனுக்கு நீண்ட காலமாகவே உண்டு. அந்த அச்சம் இப்போது வலுத்தது. இந்தப் பெயரை மாற்றிவிட வேண்டும் என்று நினைத்தான். மீண்டும் ரகுவரன் ஞாபகத்தில் வந்தான். சந்தியில் ஒரு சிறுவனாக அன்றி ஒரு முழுமனிதனாக நின்ற ரகுவரனின் மிடுக்கு அங்கு நின்ற சனங்கள் பார்வையாலும் செய்கையாலும் ரகுவரனிற்கும் அவனது நண்பர்களுக்கும் கொடுத்த மரியாதை, காட்டிய பயபக்தி, ரகுவரனின் அளவெடுத்த புன்னகை- சிந்திய இரண்டொரு வார்த்தைகள். இப்போது அவன் மதிப்பில் ரகுவரன் உயர்ந்து காணப்பட்டான். முன்னைவிட இப்போது குட்டி அவன் அதிகம் நேசித்தான். நாளை பாடசாலை என்ற பரபரப்பில் தூங்கியிருக்க வேண்டிய குட்டி அந்த நினைவே இல்லாமல் சாகச எண்ணங்களுக்குள் தன்னை படிப்படியாக இழந்து மெதுவாக உறங்கிப் போனான்.

• தொடரும் •

Nur Für Freundkreis

புதிய சந்தா விபரம்

தனிப்பிரதி - 3 S.Fr.

ஒருவருடம் - 22 S.Fr.

ஐரோப்பிய நாடுகள் - 25 S.Fr.

(தபால் செலவு உட்பட)

வாசகர்களே!

விமர்சனங்களையும்

ஆக்கங்களையும்

வரவேற்கிறோம்!

• ஆர். குழு •

வங்கிக் கணக்கு இல:

SPAR KONTO : 0094- 157146- 60- 1

வங்கி முகவரி:

"BüCHER VERKAUF"

SCHWIZERISCHE KREDITANSTALT

SWITZERLAND

www.tamilarangam.net



# ஐரோப்பிய தமிழ் சஞ்சிகைகளும் விடுதலை அரசியலும்

சி. சிவசேகரம்

ஐரோப்பாவில் இருந்து எத்தனை தமிழ்ச் சஞ்சிகைகள் வெளிவருகின்றன என்று எனக்குத் தெரியாது. சஞ்சிகைகளுடன் பரிச்சயம் மிகுந்தோரானாலும் திட்டவட்டமாகக் கூறமுடியாத விதமாகச் சஞ்சிகைகள் ஒழுங்கற்ற கால இடைவெளிகளில் வருவதும் எதிர்பாராத விதமாக மறைவதும் மீண்டும் உயிர்ப்பதும் புதியவை தோன்றி நிலையாது போவதும் நாமறிந்த விஷயங்கள். பெருவாரியான சஞ்சிகைகள் அரசியல் பற்றிய அக்கறையுடையவை. அரசியலைத் தவிர்க்கும் சஞ்சிகைகளும் சூழலின் நிர்ப்பந்தம் காரணமாகவே அவ்வாறு செய்கின்றன. இன்று ஐரோப்பாவிற் தஞ்சம் புகுந்த தமிழரால் வெளிவிடப்படும் இச்சஞ்சிகைகள் வேறு காரணங்கட்காக அரசியல் பற்றி அக்கறை காட்ட விரும்பாதிருப்பின், அது, வீடு பற்றி எரியும் போது வீணை மீட்டும் மனப்பான்மையையே குறிக்கும். சூழலின் நெருக்கடியால் அரசியல் பற்றி நேரடியாக எழுதாத ஏடுகளிற் கூட அரசியல் பிணைப்புடனான ஆக்கங்களைக் காணலாம்.

இயக்கச் சார்பான ஏடுகளென்று குறிப்பிடக் கூடியவற்றுள் பெருவாரியானவை முக்கிய விடுதலை இயக்கங்களின் நேரடியான ஆளுமைக்குட்பட்டவை. இவை என்ன நோக்குடன் செயற்படுகின்றன என்று

www.tamilarangam.net



கேள்விக்கு அவற்றைப் பிரசுரிக்கும் நிறுவனங்களோ பிரசுரிப்போர் சார்ந்துள்ள இயக்கமோ என்ன நோக்குடன் செயற்படுகின்றது என்பதை அறிவதன் மூலம் விடை பெறலாம். அவை பற்றிய விமர்சனங்களும் எதிர்பார்ப்புக்களும் அவை சார்ந்த இயக்கங்கள் பற்றியனவாகவும் இருத்தல் தவிர்க்க முடியாதது. எனவே அவை பற்றி இங்கு விமர்சிப்பதை விட, நேரடியானதும் விரிவானதுமான ஒரு அரசியல் விமர்சனத்திலே கவனஞ் செலுத்தலாம். இக்கட்டுரையின் கால, நீள வரையறைகட்கும் கட்டுரையாளருடைய வசதிக்கும், தகுதிக்கும் மீறிய கருமமாகவே அது உண்மையாய் அம்முயற்சி தவிர்க்கப்படுகிறது.

அரசியல் வேண்டுமென்றே தவிர்க்கும் ஏடுகள் ஐரோப்பாவிலிருந்து இடுகதம், பொம்மை, போன்றவற்றின் தரத்துக்கும் தன்மைக்கும் நிகரான முயற்சிகளில் இறங்கட்டும். சமுதாய உணர்வுடனும் அரசியல் பற்றி வேறுபடும் அளவுகளிற் பரிச்சயத்துடனும் தமிழ் மக்களது மொழி, கலை, இலக்கியம், கலாசாரம், சமுதாய மாற்றம், உலகு பரந்த அறிவு சார்ந்த விஷயங்கள் என்பன பற்றி அக்கறை காட்டும் ஏடுகள் என்ன செய்கின்றன எனவும் என்ன செய்யலாம் எனவும் சுருக்கமாக இங்கு கவனிப்போம்.

இயக்கச் சார்பற்ற ஏடுகள் எனும் போது அந்த ஏடுகளின் வெளியீட்டாளர் எவரும் எந்த இயக்கத்தினதும் உறுப்பினரோ அனுதாபியோ இல்லை என்பது ஒரு முன் நிபந்தனையில்லை. அந்த ஏட்டின் ஒரு

www.tamilarangam.net



குறிப்பிட்ட இயக்கத்திற்குச் சாதகமான முனைப்புத் தென்படக் கூடாது. ஏனும் தேவையும் இல்லை. அந்த ஏடு ஒத்த அரசியற் கருத்துடையதும் இனியொரு காலத்தில் ஒரு இயக்கமாகத் தம்மை அமைக்கும் நோக்குடையதுமான ஒரு குழுவினரால் வெளியிடப்படுவதாயும் இருக்கவும் கூடும். ஆயினும், பல்வேறுபட்ட அரசியற் பார்வைகளையும் மாறுபட்ட கருத்துக்களையும் மனந்திறந்த விவாதங்களையும் அனுமதிக்கும் ஏடுகள் யாவும் இவ்விடத்து இயக்கச் சார்பற்ற ஏடுகளாகக் கருதத்தக்கன. இவை ஒரு குறிப்பிட்ட இயக்கத்தின் சித்தாந்தத்தை விளக்கும் ஏடுகளினின்றும் பிரசார ஏடுகளினின்றும் தம் உள்ளடக்கத்தின் தன்மையால் வேறுபடுவன.

எவ்வாறாயினும், ஐரோப்பியத் தமிழ்ச் சஞ்சிகைகளில், இயக்கச் சார்பற்ற ஏடுகளில் தேசிய விடுதலைப் போராட்டம், பெண்ணுரிமை, ஜனநாயக - மனித உரிமைகள் போன்ற விஷயங்களில் தெளிவான நிலைப்பாடுகளை காணலாம். குறிப்பான அம்சங்களிற் பாரிய வேறுபாடுகள் இருந்த போதும், பெருவாரியான இயக்கச் சார்பற்ற ஏடுகளில் அடிப்படையான ஒற்றுமைகள் உள்ளன. இவற்றுக்கான காரணங்கள் பல. விடுதலை இயக்கங்களில் வேறுபடும் அளவுகளில் ஈடுபட்டவர்களே பெரும்பாலும் இவ்வாறான ஏடுகளின் கருவிகளாக உள்ளமையால், விடுதலைப் போராட்டத்தின் தவறுகளை மீளாய்வு செய்து ஒரு சரியான பாதையை முன்வைக்கும் நோக்கம் ஒற்றுமையையும் வேறுபட்ட இயக்க அனுபவங்களும் அனு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



-குமுறைகளும் வேற்றுமைகளையும் உருவாக்குகின்றன. இந்த ஒற்றுமை - வேற்றுமைகளூடு தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்திற்கும் ஐரோப்பாவில் வாழும் தமிழர்களது அடிப்படை உரிமைகட்குமாக உழைக்கும் ஒரு பொது அடிப்படையை உருவாக்கும் வாய்ப்பு உண்டு. ஜேர்மன் தமிழ்ச் சஞ்சிகைகளின் முயற்சியின் விளைவான இலக்கியச் சந்திப்புகள் மிகவும் வரவேற்கத்தக்க முயற்சிகளாயினும் அவற்றின் நோக்கம் வரையறுக்கப்பட்டதொன்று. இலக்கியச் சந்திப்புக்கட்கு மட்டுமன்றிச், சில அடிப்படையான சமுதாய விழுமியங்களையும் சில இறுகிய கால இலக்குகள் பற்றிய பரந்துபட்ட ஒற்றுமையையும் பேணும் சஞ்சிகைகள் மத்தியில், இறுக்கமான ஒத்துழைப்புக்கும் இடமுண்டு. இவ்வாறான ஒரு ஐக்கியமான செயற்பாட்டின் நன்மைகளைச் சம்பந்தப்பட்ட ஏடுகளின் பிரசுரகர்த்தாக்கள் உணர்ந்தாலும் ஒரு திட்டத்தை முன் வைத்து அதை நடைமுறைப்படுத்துவது இன்னும் சாத்தியமாகவில்லை.

ஐரோப்பாவில் உள்ள சகல தமிழருக்குத் தம் அரசியல் கருத்துக்களைச் சுதந்திரமாகவும் பயமின்றியும் வெளியிடும் வசதியும் வாய்ப்பும் இல்லை. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமான முறையில் மாற்றுக் கருத்துக்களை மறிக்கும் செயல்கள் நடைபெறுகின்றன. தனிமனிதர் மீதான தாக்குதல்கள், மிரட்டல்கள், அவர்கள் பற்றிய அவதூறுகள், உறவினர்கள் மூலம் தரப்படும் நெருக்கடிகள் போன்றவை வெளிவெளியாகவே மேற்கொள்ளப்படுகின்றன. சஞ்சிகைகளின் விநியோகத்திற்கும்

www.tamilarangam.net



பலவிதமான தடைகள் உள்ளன. சொந்தப் பெயரில் எழுதும் உரிமை சிலருக்கு மறுக்கப்பட்டுள்ளது. இவ்விஷயத்தில் ஒரு குறிப்பிட்ட இயக்கத்தை மட்டும் குற்றம் சொல்வது சரியாகாது. ஜனநாயக மறுப்பு அரசியல் முன்வரிசை விடுதலை இயக்கங்களது வளர்ச்சியோடு நெருங்கப் பிணைந்த ஒன்றாகவே காணப்பட்டுள்ளது. வெகுஜன அரசியல் வற்புறுத்தும் இயக்கங்களிலும் இத்தவறு காணப்படுவது உண்மை. தமிழ்ப் பிரதேசங்களில் 1983 க்கு வெகுகாலம் முன்னரே ஜனநாயகவிரோத அரசியல் தமிழரசுக்கட்சி / த.வி.கூ தலைமைகளால் ஊக்குவிக்கப்பட்டது. இதனின்று விடுபடும் தேவையை இயக்கச் சார்பற்ற ஐரோப்பிய தமிழ்ச் சஞ்சிகைகள் பல உணருகின்றன. இந்த வகையில், திறந்த முறையில் கருத்து மோதல்களை ஊக்குவிக்கும் கொள்கை சில ஏடுகளால் கடைப்பிடிக்கப்படுகிறது. அண்மையிற் தூண்டில் (ஜேர்மனி), சுவடுகள் (நோர்வே) ஆகிய ஏடுகளிற் பிரசுரமான விவாதங்கள் இதற்கான நல்ல உதாரணங்கள்.

ஐரோப்பியத் தமிழ் ஏடுகள் வெறும் விவாதமேடைகளாகவே இருக்கக் கூடாது. என்பது தீர்க்கமான அரசியல் முன்புடன் சஞ்சிகை வெளியீட்டில் இறங்கியோரது கருத்து. அவர்களது சஞ்சிகைகளில் வரும் விவாதங்கள் ஒரு குறிப்பிட்ட இலக்கையும், அதை அடைவதற்காகத், தெளிவானதாக வேணும் அடையாளங் காணப்பட்ட ஒரு அணுகுமுறையையும் மையமாகக் கொண்டமையுமாறு ஊக்குவிக்கப்படுகின்றன. இங்கும், மாற்றுக் கருத்துக்களின் மோதலுக்கும் சுதந்திரமான

www.tamilarangam.net



கருத்துப் பரிமாறலுக்கும் இடம் உண்டு. ஏடுகளின் தன்மை அதன் வாசகர்களையும் எழுத்தாளர்களையும் நிர்ணயிப்பதால், ஏடுகளின் வெளியீட்டாளர்கள் விரும்பும் வரையறைகட்குள்ளேயே கருத்து மோதல்கள் நிகழுகின்றன. மனிதம் (சுவிஸ்), சிந்தனை (ஜேர்மனி), போன்ற சமுதாய - அரசியல் ஏடுகளும் சக்தி (நோர்வே) போன்ற பெண்ணிய ஏடுகளும் இத்தகையன எனலாம். இவ்வேடுகளின் அரசியல், சமுதாய முனைப்புகள் ஜனநாயகமான முறையில் கருத்துப் பரிமாறலை முடக்கவில்லை.

அ.ஆ.இ. (நெதர்லாந்து), ஓசை (பிரான்ஸ்) போன்ற ஏடுகள் சமூகவியல், விஞ்ஞானம், இலக்கியம் போன்ற துறைகளில் பயனுள்ள தகவல்களைத் தத்தமக்குரிய சமுதாய நோக்குடன் வெளிக்கொணர்கின்றன. அவ்வேடுகளின் உள்ளடக்கம் அவை செயற்படும் நாடுகளின் தமிழ்ச் சமுதாயங்களில் உள்ள சூழலுக்கு ஏற்ப அமைந்துள்ளது. பிற சில ஏடுகள் போன்று முன்னணியை விடுதல் இயக்கம் ஒன்றையோ பலவற்றையோ பற்றிய கடுமையான விமர்சனங்களைக் காணவியலாத போதும் அவையும் ஜனநாயக முறையிலான வெகுஜன அரசியலையே வலியுறுத்துகின்றன.

இவற்றை விட, ஒரு திட்டவட்டமான அரசியற் பார்வையுடையோரும் குறிப்பிட்ட ஒரு இயக்கச் சார்புடையோரும் நடத்தும் வெகுஜன வாசிப்புக்குரிய சில சஞ்சிகைகளிலும் விவாதங்கள் உள்ளன. இவ்வகையான ஏடுகளாற் சிறந்த முறையிலான விவாதத்தை எவ்வளவு காலத்துக்கு ஊக்குவிக்க முடியும்

www.tamilarangam.net



என்பதை அவரவர் சார்ந்த இயக்கமும் அவரவரது அரசி-யல் ஈடுபாடுமே தீர்மானிக்கும். மாறுபாடான கருத்தை ஏற்காவிடினும் மதிக்கவும் தமது நிலைப்பாட்டை நியா-யமான முறையில் தெளிவுபடுத்தி வலியுறுத்தவும் அவர்-கட்கு இயலுமாக உள்ளவரை, இயக்கச்சார்பற்ற ஏடு-களுடன் மட்டுமன்றி மாற்று இயக்க ஏடுகளுடனுங் கூட ஒத்து இயங்கக் கூடிய வாய்ப்பு அவர்கட்கு உண்டு.

ஐரோப்பியத் தமிழ்ச் சஞ்சிகைகள் சரியான ஒரு விடுதலை அரசியல் மார்க்கத்துக்கு வழிவகுக்க வேண்டும் என்ற விருப்பம் அரசியல் உணர்வுடைய பலரிடமும் உள்ளது. இது நியாயமானதுங் கூட, ஆயினும் இன்-றைய சூழ்நிலைகளிற் சஞ்சிகைகள் மூலம் சாதிக்கக் கூடியது என்ன என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இதுவரைக்கும் மட்டுமன்றி இன்னும் பல ஆண்டுகட்கும், ஜனநாயக - மனித உரிமைகளையும் தேசிய இனங்களதும் இனப் பிரிவுகளதும் சுயநிர்ணயவுரிமையையும் வலியுறுத்திப் போராட வல்ல வலிய ஒரு இணைவிடுதலைச் சக்தியோ அல்-லது அவ்வடிப்படைகளின் மீது இணைந்து செயற்படவல்ல சக்திகளோ வளர்ச்சியடைந்த பின்னருங் கூட ஜனநாய-கமுறையிலான திறந்த விவாதக் களங்கட்கான தேவை உண்டு. ஜனநாயக முறையிலான செயற்பாடு எவருக்கும் எடுத்த எடுப்பிற் கைவருவதில்லை. மாற்றுக் கருத்துக்களை ஏற்காத போதும் அவற்றுக்கு மதிப்பளித்து விவாதத்-தின் மூலம் முகங்கொடுக்கவும் முடியின் முறியடிக்க-வும் முடியாக்கால் ஏற்கவும் வல்ல மனப்பக்குவம் நடை

www.tamilarangam.net



முறை மூலமே உருவாகிறது. தமிழர் விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் இழந்து போன ஜனநாயக அரசியல் முறையும் நாம் இன்னுங்கற்க அதிகம் உள்ள ஜனநாயகப் போராட்ட முறையும் பரவலாக்கப்பட வேண்டும். அந்த வகையில் ஆரோக்கியமான விவாதத்திற்கான களங்களாக ஐரோப்பியத் தமிழ்ச் சஞ்சிகைகள் தொடர்ந்தும் செயற்படுவது விரும்பத்தக்கது.

இலங்கையில் கடந்த சில ஆண்டுகளாகவே மறுக்கப்பட்டுப் பழக்கமற்றுப் போன ஒரு சுதந்திரமான கருத்துப் பரிமாறல் ஐரோப்பியச் சூழலிற் படிப்படியாகவே உருவாக்க முடிந்துள்ளது. இது இன்னும் விருத்தியடைய வேண்டும். எந்த ஐரோப்பியத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் மையமாகக் கொண்டு அரசியல் இயக்கமொன்றைக் கட்டியெழுப்ப விரும்புவோரும், இயக்கச்சார்புடையனவாயினும், ஆரோக்கியமான விவாதத்தை ஊக்குவிக்கும் குழுக்களுடன் தொடர்புடையோரும் இன்றைய, சிறு வெற்றிகளுடன் திருப்தியடைந்து விட முடியாது. இயக்கச்சார்பற்ற குழுக்களின் செழிப்பு, விடுதலைப் போராட்டத்தின் பேராலோ அரசியல் அதிகாரத்தின் பேராலோ, மக்களது அடிப்படையான கருத்துச் சுதந்திரத்தை மறிக்க முனைவோருக்கு எதிரான ஒரு வலிய ஆயுதமாகும். அந்த ஜனநாயகக் கருவியை மேலும் வலிமையும் கூர்மையும் அடையச் செய்ய நாம் பல வழிகளில் உதவ முடியும்.

இயக்கச் சார்பற்ற சஞ்சிகைகளிடையில் பகைமை இல்லாவிட்டாலும் ஒத்துழைப்பு குறைந்தபட்ச நிலையிலேயே

www.tamilarangam.net



உள்ளது. இயக்கச்சார்பற்ற சஞ்சிகைகளின் விநியோகமும் நிர்வாகமும் மேலும் திருந்த இடமுண்டு. சஞ்சிகைகளின் உள்ளடக்கம் பற்றி வாசகர்களின் எதிர்பார்ப்புக்கள் பற்றிய தகவல்களும் சஞ்சிகைகளின் திட்டமிடலும் அவற்றினிடையான ஒத்துழைப்பின் மூலம் பெரிதும் முன்னேறலாம். இது மட்டுமன்றி, இந்தியாவிலிருந்து ஒரு காலத்தில் இலங்கையில் வந்து இறங்கிய பாமரத்தன-மான குப்பைகளை அகற்றித் தரமான ஈழத்தமிழ் இலக்கி-யத்தையும் விமர்சனத்தையும் 1956 க்குப் பின் சாத்தியமா-க்கியது போன்று இன்று ஐரோப்பாவிலும் செய்ய வே-ண்டியுள்ளது. வீடியோ கலாசாரத்துக்கும் குமுதம்-பொம்-மை' ரசனைக்கும் முகங்கொடுக்கும் முறையில் காத்திரமான அழகு உணர்வுள்ள படைப்புகளை நாம் பரவலாக்க வேண்டும். தமிழில் விஞ்ஞான, சமூகவியற் சிந்தனைகளைப் பரவலாக்கும் பணியும் நம்முன் உள்ளது. இவற்றைச் செய்ய வல்லவர்களும் தகுதியுள்ளவர்களும் பலர் நம் மத்தியில் உள்ளனர். அவர்களைத் தமிழ்ச் சஞ்சிகைகள் பயன்படுத்த வேண்டும். விடுதலை அரசியல் என்பது போராட்ட பிரசார அரசியல் மட்டுமல்ல, சமுதாய விழிப்புணர்வு தொடர்பானதுமாகும். ஐரோப்பா வாழ் தமிழர் மத்தியில் உயர்வான சிந்தனையையும் உலகுபர-ந்த பார்வையையும் விருத்தி செய்யும் பணியை விடுதலைப் போராட்டத்திலின்று தனிமைப்படுத்த முடியாது. சஞ்சிகைகள் மத்தியிலான கூடிய ஒத்துழைப்புப் பற்றிய கருத்துக்கள் சிலமாத-ங்களாக காதில் விழுந்து வருகின்றன. அவை விரைவில் நடைமு-றைப்படும் என்பது என்போன்ற பலரது எண்ணமும் எதிர்பார்ப்புமாகு

www.tamilarangam.net



# ஈழத்தமிழரை வெளியேற்றாதே!

(தமிழகத்தில் புதியஜனநாயகத்தின் குரல்)

அன்பார்ந்த -----

வணக்கங்கள்!

"ஈழத் தமிழரை வெளியேற்றாதே!" என்ற தலைப்பில் பிரசுரம், சுவரொட்டி, அரங்கு கூட்டங்கள் மூலமாக நாம் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறோம். நாம் செய்திருப்பது குறைவானதுதான் என்றாலும் எந்தவொரு ஓட்டுக் கட்சியோ, ஈழ விடுதலை ஆதரவு இயக்கங்களோ இந்த அளவுக்கு செய்யக்கூட முன்வரவில்லை. ராஜீவ் கொலையில் தம்மையும் சேர்த்து முடிச்சுப் போடுவார்களோ என்ற பீதியில் அவர்கள் வாய்மூடிக் கிடக்கின்றனர். 1983 ஜூலை கலவரத்திற்குப் பிறகு தமிழகத்தில் காணப்பட்ட எழுச்சியுணர்வு இன்று இல்லை. ஈழத் தமிழன் எக்கேடு கெட்டால் எமக்கென்ன வந்தது? என்ற பொறுப்பற்ற போக்கான நிலைமைதான் இங்குள்ளது. ஈழத் தமிழருக்கு ஆதரவாக குரல் கொடுப்பவர்கள் எல்லாம் ராஜீவ் கொலையில் உடந்தையானவர்கள் என்ற தவறான கருத்துதான் மக்களிடம் உள்ளது. அந்த அளவுக்கு ஆளும் வர்க்கங்களின் அவதூறு-பொய் பிரச்சாரங்கள் மக்களை மூளைச் சலவை செய்துள்ளது.

இந்நிலையில் அப்பாவி அகதிகளும், ஈழ விடுதலை ஆதரவாளர்களும், பிரபாகரன்-புலிகளின் ரசிகர்களும் இங்கு பெருமளவில் கைது செய்யப்பட்டுள்ளனர். அகதி முகாம்கள் துப்பாக்கி முனையில் சோதனையிடப்பட்டு, சந்தேகிக்கப்படுவோர் விசாரணைக்கு இழுத்துச் செல்லப் படுகின்றனர்.

www.tamilarangam.net



முகாமுக்கு வெளியேயுள்ள அகதி ஒருவர், முகாமிலுள்ள தமது உறவினரையோ நண்பரையோ சந்தித்துப் பேசமுடியாது. முன் கூட்டியே மாவட்ட கலெக்டரிடம் விண்ணப்பித்து அனுமதி பெற்ற பின்னரே, ஒரு போலீஸ் அதிகாரியின் முன்னிலையில் பேச அனுமதிக்கப்படும். இந்நிலையில் இந்தியத் தமிழர்கள் யாரும் அகதிகளுடன் தொடர்புகொள்ள அறவே சாத்தியமில்லை. அகதி முகாமுக்குள் என்ன நடக்கிறது என்று வெளி உலகுக்குத் தெரியாமல் அடக்கத் துடிக்கிறது இந்திய அரசு.

முன்பு பாசிச இந்திரா கொலையுண்ட போது சீக்கிய இனத்தையே பழிவாங்கியதைப் போல, இப்போது ராஜீவ் கொலையை அடுத்து ஈழத் தமிழர்களையும், இந்தியத் தமிழர்களையும் இந்திய அரசு பழிவாங்க முயற்சிக்கிறது. ஆயுதக் கவர்ச்சியின் காரணமாக புலிகள் - பிரபாகரனை வழிபட்ட

இந்தியத் தமிழர்கள், போரில் காயமுற்று தமிழகத்துக்கு ஓடி வந்த புலிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் மருத்துவ உதவி செய்தவர்கள், ஈழ ஆதரவு பிரசாரங்கள், புத்தகங்களை வெளியிட்டவர்கள், அவற்றை அச்சிட்டுக் கொடுத்தவர்கள், தனித் தமிழ் இயக்கத்தவர்கள் - என பலதரப்பினரும் இப்போது மத்தியப் புலனாய்வுத் துறையினரால் (C.B.I) விசாரணை செய்யப்பட்டு, தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றனர். இதனால் அனைத்து ஈழ ஆதரவு இயக்கங்களும் இன்று பீதியடைந்து வாய்மூடிக் கிடக்கின்றன. குறிப்பாக, ராஜீவ் கொலையில் சிக்கிய 'குற்றவாளி' யாகக் கருதப்படும் சிவராசன், சுபா ஆகியோருக்கு அடைக்கலம் கொடுத்தார்கள் என்று கூறி யார் மீதும் பொய்வழக்கு ஜோடிக்க வாய்ப்புள்ளது. 'குற்றவாளி'களை இன்னமும் கண்டுபிடிக்க முடியாததால், CBI இவ்வாறு சிலர் மீது பொய்வழக்கு ஜோடித்து

www.tamilarangam.net



தனது திறமையை மக்களிடம் காட்ட முயற்சிக்கிறது. எனவே ஈழத் தமிழருக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க இன்று யாருமே முன்வரத் தயாராக இல்லை.

ஆளும் வர்க்கத்தின் காவலாக ஏவல் நாயாகச் செயல்படும் CBI, இப்போது புதிய ஜனநாயகத்தின் மீதும் பாய்ந்துள்ளது. பு.ஜ. இதழுக்கு உரிமை அளித்துள்ள அச்சகத்தார், அச்சுக் கோர்ப்பவர் (Type Setters), ஒப்பந்த முறையில் இதழை அச்சிடுபவர் (Offset printers) ஆகியோரிடம் CBI நேரில் வந்து மிரட்டி பு.ஜ.வை அச்சிடக் கூடாது என்று பீதியூட்டியுள்ளது. ராஜீவ் கொலை பற்றி மாறுபட்ட கோணத்தில் எழுதியது, ஈழத் தமிழருக்கு ஆதரவுக் குரல் கொடுப்பது ஆகியவற்றால் எரிச்சலடைந்துள்ள காங்கிரசு - அ.தி.மு.க ஆளும் கும்பல் இப்படி CBI யை ஏவிவிட்டு பு.ஜ.வின் குரல்வளையை நெரிக்க முயற்சிக்கிறது. CBI யின் சட்ட விரோத மிரட்டலின் விளைவாக, சம்பந்தப்பட்ட அச்சகத்தினர் தொடர்ந்து நமது இதழை அச்சிட மறுத்து விட்டனர். இதே நேரத்தில் புலிகளின் "SATANIC FORCES" என்ற IPKF படையை விமர்சித்து எழுதப்பட்ட நூலை அச்சிட்டது தேச விரோதச் செயல் என்று வேறு இரு அச்சகங்களில் ரெய்டு நடந்து, அவை மூடப்பட்டு, அச்சக அதிபர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈழ அகதிகளுக்கு உதவக் கூடிய நேர்மையான சக்திகள் என்று எமக்குத் தெரிந்தவரையில் யாருமில்லை. எல்லோரும் ஈழ அகதிகளை வைத்து பிழைப்பு நடத்தும் ஒட்டுண்ணிகளாகவே உள்ளனர். எம் கண்ணெதிரே ஈழ மக்கள் அவதிப்படுவதைப் பார்த்து எம் நெஞ்சம் விம்முகிறது. ஆனால் நேரடியாக உதவ முடியாதபடி அரசு எமது கைகளைக் கட்டிப் போட்டுள்ளது. முன்பு பு.ஜ. இதழில் ஈழ அகதிகளின் நிலைமையைப் பற்றி கட்டுரை வெளியானபோதுகூட, சில வெளிநாட்டு வாசகர்கள் கடிதம் எழுதி

► 41ம் பக்கம்

www.tamilarangam.net



கதை சொல்ல மாமன்
சிறையிலிருந்து வருவான்
நீதி விஷம் குடித்த சேதி
ஆதியிலிருந்து சொல்வான்
பயணம் சென்றவர்க்கெல்லாம்
நியாயம் கிடைக்கும்வரை
விண்ணிலிருந்து வந்தவனே
கண்மூடி நியுறங்கு !

கிடைக்குச் சென்ற தாத்தா
சடை வளர்த்து வருவார்
உண்பதற்கு ஏதுமில்லை
விண்போதல் நலமென்பார்
சோறுதர மறந்தவரை
ஆறு கொண்டு போகும்வரை
எம் கண்களைப் போன்றவளே
செம்மண்மீது நியுறங்கு !



போருக்குப் போன அக்காள்
ஊருக்குத் திரும்புவாள்
முனையிலே கண்ட உண்மை
பனை ஓலையில் எழுதிவைப்பாள்
சதி செய்தோர் யாரென்று
மதியுணரும் வரைக்கும்
கொஞ்சுகிற தென்றலே
அஞ்சாமல் நியுறங்கு !

எங்கோ போன தந்தை
இங்கோர் நாள் வருவார்
காட்டு வழிகளிலே
மாட்டுப்பட்ட கதை சொல்வார்
திசை தொலைத்த முகில்களை
விசைகொண்டு தாக்கும்வரை
சிந்தரத்தின் சிறப்பே
சுதந்திரமாய் நியுறங்கு !

கோயிலுக்குச் சென்ற பாட்டி
வெயில் தணிய வருவாள்
வாலயமான முருகனும்
ஆலயத்தில் இல்லையென்பாள்
சாதிகள் தொலைந்த இடம்
காதக்கெட்டும் வரைக்கும்
வசந்தத்தின் முழுவனப்பே
ஆனந்தமாய் நியுறங்கு !

இருட்டின் புதல்வர்கள்
இரவில் வருவார்கள்
குருட்டுக் கண்களால்
இரேரம் புரிவார்கள்
திருட்டு உள்ளங்கள்
திருந்தும் வரைக்கும்
பரிதியின் அழகே
அமைதியாய் உறங்கு !

www.tamilarangam.net



# சோவியத்தில் நடப்பதுதான் என்ன?



« நாங்கள் இனி நிம்மதியாய் மூச்சுவிடமுடியும். அல்ப்ஸ் தொடரை சூழ்ந்த புதிய ஸ்டாலினிச சாம்ராஜ்ஜியம் வீழ்த்தப்பட்டுவிட்டது. மொஸ்கோவையும், பால்டிக் குடியரசுகளையும் முற்றுகையிட்ட செம்படை திரும்புகிறது. சதிப்புரட்சிக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். அறுபது மணித்தியாலங்களுக்குள் மாறு சீரமைப்பின் எதிராளிகள் (ஆட்சிக் கவிழ்ப்பாளர்கள்) நிலை குலைந்து போயினர். பொறிஸ் ஜெல்சின் என்று வியக்கத்தகு பலம் பொருந்திய மனிதன் ரசிய குடியரசுத்தலைவன் இன்றைய சோவியத் யூனியனின் கதாநாயகன் ஆகிறான். கொர்பச்சேவ் மீண்டும் அதிகாரத்துக்கு வருகிறார் » இவ்வாறு மேற்குலக செய்தி தொடர்பு சாதனங்கள் எல்லாம் மகிழ்ச்சி ஆரவாரத்தில் செய்திகள் பரப்பின.

ஆட்சிக்கவிழ்ப்பு முறியடிக்கப்பட்டபின்பு கொர்பச்சேவ் சந்தித்த முதல் பத்திரிகையாளர் மாநாட்டில்

« ஆட்சிக் கவிழ்ப்பாளர்கள் மக்களுக்கு எதிரானவர்கள், ஜனநாயகத்துக்கு எதிரானவர்கள், என் மாறுசீரமைப்பு கொள்கைக்கு கிடைத்த மிகவும் கெட்ட அனுபவம் இது » என்றார் கொர்பச்சேவ். இவரைப் பொறுத்தவரையில் ஆட்சிக்கவிழ்ப்பாளர்கள் மோசமாக, முரட்டுத்தனமாக நம்பிக்கைத் துரோகம் இழைத்து விட்டார்கள். ஏனெனில் இந்தக் கவிழ்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட எல்லோ-

www.tamilarangam.net



ருமே, சென்ற காலங்களில் கொர்பச்சேவின் சர்வாதிகாரத்தோடு கம்யூனிச கட்சியில் நிகழ்த்திய தீவிர களையெடுப்புகளில் தெரிவான நம்பிக்கையாளர்கள்தான்.

கொர்பச்சேவிற்கு அடுத்து உயர்பதவியில் இருக்கும் உப ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர், உளவுப்படைத் தலைவர் (K.G.B), சோவியத் பாராளுமன்ற பிரதமமந்திரி, உள்நாட்டு அமைச்சர் என்று 'சோசலிச' சோவியத் அரசு இயந்திரத்தை இயக்குவதில் முக்கிய பதவி வகித்த எட்டுப்பேர் இந்த கவிழ்ப்பு நடவடிக்கையைச் செய்தனர்.

மிகையில் கொர்பச்சேவின் மறுசீரமைப்புக் கொள்கைகள் (பிரெஸ் ரொய்க்கா, கிளாஸ்நோட்) கொண்டுவரப்பட்டு அய்ந்து ஆண்டுகள் ஓடி ஒழிந்த நிலையில் சோவியத்யூனியனுள் அடங்கும் பதினைந்து குடியரசுகளுக்கும் மத்திய அரசில் குவிந்திருந்த அதிகாரங்களை பரவலாக்கும் வகையில் புதிய ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதற்கு இருந்த முதல் நாளில் இந்த ஆட்சிக்கவிழ்ப்பு நடந்தது. கருங்கடலை ஒட்டியுள்ள கிறிமின் என்ற பிராந்தியத்தில் கொர்பச்சேவ் விடுமுறையை கழித்துக் கொண்டிருந்தபோது ஒகஸ்ட் 19ம் திகதி இரவோடு இரவாய் உபஜனாதிபதி கென்னடி ஜெனாஜோவ் தலைமையில் எட்டுப்பேர் அதிகாரத்தை கைப்பற்றிவிட்டு கொர்பச்சேவ் சுகயீன காரணத்தால் 'அவசரகால அரசாங்கக்குழு நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தனர்.

சில குடியரசுகளில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டன தலைநகர் மொஸ்கோவிலோ வேறு எங்கிலுமோ வேலை நிறுத்தங்கள் ஊர்வலங்கள் தடைசெய்யப்பட்டன. செய்தித்தொடர்பு சாதனங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. இந்நிலைமைகள் ஆறுமாத காலத்துக்கு நீடிக்கும் என்றும் அறிவிப்புச்செய்தனர். சர்வதேச அரசியலைப் பொறுத்த வரை கொர்பச்சேவின் பாதையிலேயே அணுகப்படும் என்றும் கிழக்கு

www.tamilarangam.net



ஜேர்மனியில் இருந்து படைவிலகல் நடைபெறும் என்றும் உறுதியளித்தனர்.

சோவியத்தின் இந்த ஆட்சிக்கவிழ்ப்பை ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசைனும் லிபியத்தலைவர் கடாபியும் வரவேற்றனர். கொர்பச்சேவின் ஆட்சியில் மூன்றாம் உலக நாடுகள் சோசலிஸ ரசியாவின் உதவிகள் எதுவும் இன்றி தனித்துவிடப்பட்டதாக கடாபி சொன்னார். சோவியத்திடமிருந்தே ஈராக்கூழ ஆயுதங்களையும் பெற்றுக்கொள்ளும்போது அமெரிக்காவின் வற்புறுத்தலுக்கு இணங்கி வளைகுடா யுத்தத்துக்கு அனுமதி கொடுத்ததோடு, இரண்டு இலட்சம் மக்கள் கொல்லப்படுவதற்கும் காரணமானவர் என்று கொர்பச்சேவ் மீது குற்றம் சுமத்தினார், ஈராக்கிய அதிகாரி ஒருவர்.

அமெரிக்கா உட்பட மேற்குலகமோ இந்த சோவியத்தின் தலைமையை ஏற்க மறுத்தது. பொருளாதார தடைகள் விதிப்பதாகவும் அறிவித்தன. மீண்டும் கொர்பச்சேவை அதிகாரத்துக்கு கொண்டுவருவதற்கான சகல வழிகளிலும் இறங்கப்போவதாக அமெரிக்க அதிபர் புஷ் சொன்னார்.

« யாருமே நம்பவில்லை கொர்பி சுகயீனமுற்றிருக்கிறார் என்று» பத்திரிகைகள் தலைப்புச்செய்தி இட்டன.

கொர்பச்சேவ்; சர்வதேச அமைதியைக்கொண்டுவர மூலகாரணமானவர்.

கிழக்கு அய்ரோப்பாவில் ஜனநாயக சூழல் ஏற்படுவதற்கு வழி சமைத்தவர்.

அய்க்கிய ஜேர்மனியை உருவாக்குவதில் ஒரு சிற்பியாக இருந்தவர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக சோவியத் யூனியனை மூடியிருந்த இரும்புத்திரையை கிழித்தெறிந்தவர். இப்படி புகழ்மாலை சூட்டின மேற்குலகம்.

www.tamilarangam.net



இந்த ஆட்சிக்கவிழ்ப்பு வலதுசாரிகளின் சதியென்றும் கொர்பச்சேவ் மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டு வரப்படவேண்டுமென்றும் அதற்காக பொதுவேலை நிறுத்தங்களில் ஈடுபடுமாறு பகிரங்க அழைப்பு விடுத்தார், ரசிய குடியரசுத் தலைவர் பொறிஸ் ஜெல்சின். இந்த போராட்ட சக்திகளுக்கு முழு ஆதரவையும் வழங்குவதாக அமெரிக்கா, ஜேர்மனி போன்ற பல நாடுகள் அறிவித்தன. இந்த «அவசரகால அரசாங்கக்குழு» ரசிய குடியரசு மீதோ உக்கிரைன் குடியரசு மீதோ அதிகாரம் செலுத்த முடியாதெனவும் இக்குடியரசுகளின் மக்கள் மீதோ அதிகாரம் செலுத்த முடியாதெனவும் இக்குடியரசுகளின் மக்கள் உடனடியாக போராட்டங்களில் ஈடுபடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஒகஸ்ட் 19ம் திகதி முற்பகல் 10.40 மணியளவில் முதலில் ஐந்து கவச வண்டிகள் மொஸ்கோவுக்குள் நுழைந்தன. ஒரு மணித்தியாலத்துள் நூற்றுக்கணக்காயின. ரசிய குடியரசுத்தலைவரின் தலைமையில் போராட்ட சக்திகள் ரசிய குடியரசு பாராளுமன்ற கட்டிடத்தை சூழவும் செஞ்சதுக்கத்திலும் ஆயிரக்கணக்கில் நிறையத்தொடங்கின.

«ருசியனே ருசியர்களுக்கு எதிராக சுட வேண்டுமா?»

என்ற கோசங்கள் பலம் பெற்றன. இராணுவம் இந்த கவிழ்ப்பு அரசுக்கு ஒத்துழைக்கக்கூடாதென பொறிஸ் ஜெல்சின் அறைகூவல் விடுத்தார். இராணுவம் தாக்குதல்கள் எதிலும் இறங்கவில்லை. ஒரு பிரிவு இராணுவம் பொறிஸ் ஜெல்சினுக்கு ஆதரவளித்தது. நான்கு ஐந்து கவசவண்டிகளில் மக்கள் ஏறிநின்று மலர்களை சூடி மகிழ்ந்தனர்.

ரசிய குடியரசு பாராளுமன்ற கட்டிடத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த கவச வண்டிகள் நகராதவாறு மக்கள் மனித சங்கிலிகளை அமைத்தும், பஸ்களை நிறுத்தியும், பலகைகளைக் கொண்டும் தடைகளை ஏற்படுத்தினர்.

மொஸ்கோ வானொலி முப்பது

www.tamilarangam.net


நிமித்திற்கு ஒருமுறை அரசாங்கக்குழுவின் அறிக்கையை மட்டும் விட்டுக்கொண்டு சோகம் இசைத்தது. தொலைக்காட்சியோ நிலைமைகள் சாதாரணமாக இருப்பதாகக் காட்டிக்கொள்ள விளையாட்டு திரைப்படங்களை ஒளிபரப்பு செய்தன.

B.B.C செய்தியோ சோவியத்நாடு ஆழப்பட முடியாததாகி விட்டது என்றது. இரண்டு நாட்களுக்குள் கிரெம்ளினையும், செஞ்சதுக்கத்தையும் சுற்றி மக்கள் ஆயிரக்கணக்கில் படையெடுத்தனர். இராணுவம் தடைகளை மீற முற்பட்டபோது கைக்குண்டுகள் வீசப்பட்டன. இத்தாக்குதல்களில் சில கவச வாகனங்கள் தீப்பிடித்தன. மூன்றுபேர் மாண்டு போயினர்.

இறுதியாக மூன்றாம் நாள் பொறிஸ் ஜெல்சின் ஆறு அம்ச கோரிக்கைகளை ஆட்சிக்கவிழ்ப்பாளர்களுக்கு விடுத்தார்.

: இருபத்திநான்கு மணி நேரத்துள் கொர்பியைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். இந்தச்சந்திப்பில்கவிழ்ப்பு நடவடிக்கையின் தலைவரும் உபஜனாதிபதியுமான கென்னடி ஜெனாஜேவும் கலந்து கொண்டு மறுசீரமைப்புப்பற்றி தெளிவு படுத்த வேண்டும்.

: மூன்று நாட்களுக்குள் சர்வதேச வைத்தியர் குழு கொர்பச்சேவை பார்வையிட அனுமதிக்க வேண்டும்.

: கொர்பச்சேவ் மீண்டும் அதிகாரத்தில் அமர்த்தப்படவேண்டும்.

: இராணுவம் முகாம்களுக்கு முடக்கப்படவேண்டும்.

போன்ற ஆறு அம்ச கோரிக்கைகளையும் அமெரிக்க அதிபர், பிரித்தானிய பிரதமமந்திரி, ஜேர்மனிய அதிபர் என்று எல்லோருமே வரவேற்றதோடு, பொறிஸ் ஜெல்சினின் போராட்டத்திற்கு தொலைபேசியில் உத்வேகம் கொடுத்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"எங்களைப் பற்றி மரண அறிவித்தலை வெளியிடவேண்டாம் இன்னமும் நாங்கள் சாகவில்லை. யுத்த முனையைவிட்டு நாங்கள் வெளியேற மாட்டோம்" என்று அமெரிக்கத் தொலைக்காட்சிக்கு பேட்டி கொடுத்தார் பொறிஸ் ஜெல்சின்.

இந்நிடைமிடையில் ஆட்சிக்கவிழ்ப்பாளர்களுக்குள் முரண்பாடுகள் முற்றியிருப்பதாகவும், பாதுகாப்பு அமைச்சரும் KGB தலைவரும் அவசர கால அரசாங்கக்குழுவில் இருந்து விலகிவிட்டதாகவும் பொறிஸ் ஜெல்சின் சொன்னார். ஆயினும் கம்யூனிசக் கட்சி இதை மறுத்தது. இறுதியில் அறுபது மணி நேரத்தின் பின்பு கவிழ்ப்பாளர்கள் ஆட்சி செய்ய முடியாதவர்களாய் மீண்டும் கொர்பச்சேவை அதிகாரத்துக்கு கொண்டு வர வேண்டிய பரிதாபகரமான நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

பயமும் நிட்சயமின்மையுமாய் சூழ்ந்திருந்த அந்த அறுபது மணித்தியாலங்களும் சோவியத்தின் வரலாற்றை மாற்றும் வல்லமை பெற்றிருந்தது. குறிப்பாக மேற்குலகம் அதிர்ந்தே போனது. ஆட்சிக்கவிழ்ப்பாளர்களை புதிய ஸ்டாலினிஸ்டுகள் என்று வர்ணித்துக் கொண்டனர்.

'சோசலிஸ' சோவியத்யூனியனில் கொர்பச்சேவின் சீர்திருத்தங்கள் போதாது என்பதோடு முதலாளித்துவ மீட்சிக்காய் தலைமை வகித்து போராடும் பொறிஸ் ஜெல்சினை இந்த மூன்று நாள் போராட்டத்தில் பெரும் நெஞ்சுறுதி மிக்க தலைவனாக வெளிக்காட்டுவதில் மேற்குலகத் தலைவர்கள் மட்டுமன்றி செய்தித்தொடர்பு சாதனங்களும் கூட போட்டி போட்டுக்கொண்டன.

சோவியத்தில் இளம் ஜனநாயகம் வெற்றிபெற்றுவிட்டது என்று பத்திரிகைகள் வர்ணித்தன. அதேநேரம் இந்த ஆட்சிக்கவிழ்ப்பை கொர்பச்சேவும் ஜெல்சினும் சேர்ந்து கூட செய்திருக்கலாம் என்ற செய்தியும் பரவலாகின.

நெருக்கடிக்குள் மூழ்கியிருக்கும் சோவியத் பொருளாதாரத்தை

www.tamilarangam.net



தூக்கி நிமிர்த்த யூலையில் லண்டனில் நடந்த ஏழு கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளின் உச்சிமகாநாட்டிற்கு கடன் கேட்டுப்போனார் கொர்பச்சேவ் ஆனால் அவர்களோ சோவியத்தில் மேலும் கூடியளவு சீர்திருத்தங்களைச் செய்யும் பட்சத்தில்தான் கடனுதவி வழங்கப்படும் என கொர்பச்சேவை வற்புறுத்தினர். மொஸ்கோவிலிருந்து வந்த நோயாளி மனிதனுக்கு அமெரிக்க அதிபரும், கனடிய தலைவரும் முதுகுப்புறமாகக் க பிரித்தானிய பிரதமமந்திரி வழிகாட்டுவதாக படம் பிடித்து கருத்துப்படங்கள் வெளியிட்டு கிண்டல் செய்தன ஐரோப்பிய பத்திரிகைகள்.

ஆகவே மேற்குலக நாடுகளிடம் கூடிய உதவிகளைப்பெறவும் அதேநேரத்தில் கட்சிக்குள் இனியும் சீர்திருத்தங்களைக் கொண்டுவர தடையாக இருப்பவர்களை ஓரங்கட்டவும் கொர்பச்சேவ் ஆடிய நாடகமாகவும் இருக்கலாம் என்றும் கருதப்பட்டது. மேலும் K.G.B இன் வரலாற்றில் அது எடுத்த எந்த நடவடிக்கைகளும் தோல்விபோனதில்லை என்பதும், கொர்பச்சேவை பதவி விலக நிர்ப்பந்தித்த போதும் அவர் அடி பணிய மறுத்துவிட்டார் என்பதையும் பொருத்திப்பார்க்கும் போது இந்த சதி தோல்வியைத்தழுவும் என்பதில் கொர்பச்சேவ் கொண்டிருந்த நம்பிக்கை தெரிகிறது. எப்படி இருப்பினும் பொறிஸ் ஜெல்சினுடன் சேர்ந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்க மாட்டார் என்பது கவனிக்கப்படவேண்டிய ஒன்று. ஏனெனில் பொறிஸ் ஜெல்சின் கொர்பச்சேவிற்கு போட்டியாக இருப்பவர்.

இவர் ஆட்சிக்கவிழ்ப்பாளர்களிடம் இருந்து அதிகாரத்தை பறிப்பதற்காக கொர்பச்சேவ் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்று போராட்டத்தை நடாத்தினாலும் இன்று இவர் நடந்து கொள்ளும் போக்கு கொர்பச்சேவுக்கு அச்சுறுத்தலாகவே இருக்கிறது.

"ஆட்சிக்கவிழ்ப்பில் கொர்பச்சேவுக்கும் பங்குண்டு. இந்த கவிழ்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது யார்? இவர்களை அதிகாரத்துக்கு கொண்டுவந்து

www.tamilarangam.net



யார்? எல்லாம் கொர்பச்சேவ்தான் என்று கொர்பச்சேவ் மீது குற்றப்பட்டியலை நீட்டிக்கொண்டே போகிறார் பொரிஸ் ஜெல்சின். மேலும் கிரெம்ளினில் இருந்த சோவியத்தின் முக்கிய செய்தித்தொடர்பு சாதனங்கள் எல்லாவற்றையும் ரசியக்குடியரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததன் மூலம் கொர்பச்சேவின் அதிகாரத்தையே மலினப்படுத்திவிட்டார்.




இன்று அமெரிக்க அதிபர் உட்பட மேற்குலக தலைவர்கள் எல்லோருமே பொரிஸ் ஜெல்சினுடன் கொர்பச்சேவை இணைத்து சோவியத் யூனியனில் மேலும் அதிக பொருளாதார சீர்திருத்தங்களை கொண்டுவரும்படி வற்புறுத்துகின்றனர்.

பொரிஸ் ஜெல்சின் சோவியத் யூனியனின் வரலாற்றில் முதல் முறையாக ஜனநாயக முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ரசியக்குடியரசுத்தலைவர். இவர் சதிப்புரட்சியின் தோல்வியைத்தொடர்ந்து ரசிய குடியரசின் கம்யூனிச கட்சியையும் அதன் பத்திரிகையான பிராவ்தாவையும் தடைசெய்தார். இவரைத்தொடர்ந்து உக்கிரைன் குடியரசு உட்பட பல குடியரசுகள் கம்யூனிசக்கட்சியைத் தடை செய்தன.


இவை எல்லாவற்றிற்கும் மேலாக கொர்பச்சேவ் தனது பொதுச்செயலாளர் பதவியை துறந்ததோடு கட்சியின் மத்தியகமிட்டியையும்கலைத்துவிட்டார் ஆட்சி கவிழ்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டினார். 150 இலட்சத்துக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட கம்யூனிஸக்கட்சி 70 ஆண்டு காலமாக சோவியத் யூனியனின் எல்லா

www.tamilarangam.net


தளங்களிலும் மேலாதிக்கம் செலுத்திவந்தது. இந்தக் கட்சிக்கலைப்பு நடவடிக்கையை வெகுவாகப் பாராட்டி வரவேற்றன மேற்குலகம்.

கம்யூனிசக் கட்சி கலைப்பும் அதைத்தொடர்ந்து K.G.B நிறுவரின் சிலையும், லெனின் சிலைகளும் நினைவுச்சின்னங்களும் பல இடங்களில் உடைத்தெறியப்பட்டன.

இந்த நிலைமைகள் ஆயிரக்கணக்கான ரசிய மக்கள் லெனினின் நினைவாலயத்துக்கு படையெடுத்தனர். அங்கு பதப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் லெனினின் உடலையும் அவர்கள் புதைத்து விடுவார்கள் என்ற அச்சத்திலே கடைசியாக ஒருமுறை பார்த்திடுவோம் என்று.




"இந்த நாட்டில் இனிமேல் எதுவும் தூய்மையானதாக இருக்கப்போவதில்லை. நாம் ஒருதீவிரவாதத்திலிருந்து இன்னொரு தீவிரவாதத்திற்கு பாய்கிறோம். லெனின் எங்கள் தலைவர். அவர் எங்களுக்கும் எங்கள் நாட்டிற்கும் நல்லவை செய்ய நினைத்தார். ஆயினும் அது பின்பு வந்தவர்களால் நடைமுறையில் காணாமல் போயிற்று. இந்த நினைவுச்சின்னங்கள் அழிப்பதன் மூலம் நாம் ஒரு நாகரீகமற்ற சமூகம் என்று உலகுக்கு காட்டுகிறோம்" லெனின் நினைவாலயத்தின் முன் நின்று ஒரு பெண் குமுறினாள்.

இந்த ஆட்சிக்கவிழ்ப்போடு 'சோசலிச' சோவியத்யூனியனின் கட்டமைப்பு உடைந்து நொருங்கி விட்டது. பால்டிக்குடியரசுகள் சுதந்திரநாடுகளாக பிரகடனப்படுத்திக் கொண்டன.

www.tamilarangam.net



ஐம்பதிற்கும் அதிகமான உலகநாடுகள் பால்டிக்குடியரசுகளின் சுதந்திரத்தை அங்கீகரித்துவிட்டன.

பதினைந்து குடியரசுகளைக் கொண்டிருந்த சோவியத் யூனியனில் மூன்று பால்டிக் குடியரசுகள் பிரிந்துபோய்விட்டன. ஏனைய குடியரசுகளும் சுதந்திர குடியரசுகளாக பிரிந்துபோவதாக பிரகடனப் படுத்தின.

உடைந்து நொருங்கியிருக்கும் சோவியத்குடியரசுக்கிடையில் புதிய ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் கொர்பச்சேவ் ஈடுபட்டுள்ளார். இந்தபுதிய ஒப்பந்தம்;

குடியரசுகளின் முழுமையான சுதந்திரத்தை அங்கீகரிக்கிறது. அதேநேரம் பொருளாதார மேம்பாடு, உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் நடவடிக்கைகள், நாட்டின் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான ஓர் அய்க்கியத்தை வலியுறுத்துகிறது. இந்த அடிப்படையில் பத்து குடியரசுகளை இணைக்கும் முயற்சியில் கொர்பச்சேவ் இறங்கியுள்ளார் கொர்பச்சேவின் இந்த முயற்சி வெற்றிபெறுமாயின் தேசிய இனப்பிரச்சனைக்கு சிறப்பான தீர்வை எட்டிய முதல்நாடாக புதிய சோவியத் யூனியன் திகழும். ஆனால் இன்று வளர்ந்துவரும் நெருக்கடிகள் கொர்பச்சேவின் புதிய யூனியனை கட்டிக்காக்குமா என்பது சிந்தனைக்குரியது.

********************************* - க. தீபன் -

30ம் பக்க தொடர்.....

ஈ.டி அகதிகளுக்கு நாம் உதவ முன்வருவதாகவும், அதற்கான ஏற்பாடு செய்யுமாறும் கேட்டிருந்தனர். நாம் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ராஜீவ் கொலை நடந்த, நிலைமையே தலைகீழாக மாறிவிட்டது. தமிழகத்தில் நிலவும் மேற்கூறிய நிலைமையின் காரணமாக ஈ.டி அகதிகளுக்கு உதவி செய்வது சாத்தியமற்றதாக உள்ளது. இருப்பினும் அதற்கான முயற்சியில் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம்.

தோழமையுடன்,

ஆசிரியர் குழு.
"புதிய ஜனநாயகம்"

www.tamilarangam.net



# எதிர்பார்ப்புகள் மாற்றங்களாக.....

– ஆனந்தி –

விடிந்துவிட்டிருந்தது. யன்னல் சீலை காற்றுக்கு ஆடிக் கொண்டிருந்தது. குளிர் காற்று வந்து முகத்தில் அடித்தது. எழுந்து போய் யன்னல் சாத்த மனமின்றி கணேஸ் கட்டிலில் சோர்வாகக் கிடந்தான்.

அறையில் போட்ட பொருட்கள் அப்படியே ஒர் ஒழுங்கில்லாமல் கிடந்தது. நேற்றுப் போட்ட உடுப்பு கதிரையில் கிடந்தது. இப்போ கணேஷ் அறையை ஒழுங்காக கவனிப்பதில்லை. நேற்று சமைத்து கழுவ வேண்டிய பாத்திரங்கள் இன்னும் கழுவப்படாமல் கிடந்தன. நேற்று சமைத்த அடுப்பு இன்னும் கழுவாமல் காய்ந்து கிடந்தது. அறையைப் பார்த்தால் இரண்டு மாதத்திற்கு மேல் இங்கு ஒருவரும் இல்லாதது போல் தோற்றமளித்தது. இப்போதெல்லாம் கணேசால் ஒழுங்காக வேலைக்குப் போக முடியவில்லை. அடிக்கடி அடிவயிற்றுக்குள் குத்துகிறது. டாக்டரும் இனிக் குடிக்க வேண்டாம் குடித்தால் ஆபத்து என்று சொன்னதும் அவனால் குடிக்காமல் இருக்க முடியவில்லை. கவலையை மறக்க குடியைத் தவிர வேறு வழியும் அவனுக்குத் தெரியவில்லை. அடுத்தடுத்து அவனது குடும்பத்தில் நடந்த இரு நிகழ்ச்சிகள் அவனை மேலும் உலுக்கி விட்டன.

கணேசுக்கு நான்கு சகோதரங்கள் இரண்டு தம்பியும் இரண்டு தங்கச்சியும். தகப்பன் சில வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்திற்கு சாமான் வாங்கப் போனவர் ஷெல்லடிபட்டு இறந்து போனார். தாயார் தான் ஊரிலுள்ள நான்கு சகோதரங்களையும் கவனித்து வந்தார் ஆனால் அவர்கள் நால்வரும் இவ்விரண்டு போராட்ட இயக்கத்திற்குப் போய்விட்டார்கள்.

செய்திகடிதத்தில் வந்ததும் அவன் ஒரு கணம் ஆடிவிட்டான். மூதல் சில வாரங்களுக்கு முன் இரண்டு தம்பிமாரும் இயக்கத்துக்குப் போய்விட்டதாக கடிதம் வந்தபோது அநுதாபத்திலும்விட ஆத்திரம் தான் கூடுதலாக வந்தது. “கொழும்பில போய் விட்டேனும் போகட்டும் போன பிறகு அநியாயமாயினம் நான் செய்ததெல்லாத்தையும் மறந்து போயிற்றினம் போகட்டும்” மனதுக்குள் பேசிக்

www.tamilarangam.net



கொண்டான். ஆனாலும் எனி என்ற தம்பிமாரைப் பார்க்க மாட்டோமோ என்ற உணர்வு வேகமாக மனதில் நெருடத்தான் செய்தது. முன்பு ஒவ்வொரு நாளும் ஒரு "ஸ்ரங்"காக இருந்தது அன்றே வெவ்வேறு வகைகளுக்கு மாறியது. ஆனால் இப்போ இரண்டு தங்கச்சியும் இயக்கத்திற்கு போவதாக அவர்களே எழுதியிருக்கிறார்கள்            . கடிதம் வாசித்ததும் தாங்க முடியவில்லை. அழுதே விட்டான். யாருக்காக வாழ்ந்தானோ யாருடைய சீதனத்திற்காக இரவு பகல் உழைத்தானோ அவர்கள் இப்போ அவனுடன் இல்லை. முதல் தம்பிமார் போன போது வீட்டிற்கு கடிதம் எழுதினான். "உங்களுக்கு நானிருக்கிறேன் கவலைப்படாதீர்கள்" ஆனால் இப்போ அவர்கள்...

"நான்தான் மாதாமாதம் இங்க அவர்களுக்குத் தாரைவார்த்து குடுக்கிறனே நீங்க...". மனதுக்குள் ஆத்திரத்துடன் நினைத்தான். இரண்டு தங்கைமாரும் கடைசியாகப் போட்ட கடிதம் மீண்டும் எடுத்து வாசித்தான்.

அன்பு அண்ணா

இந்தச் செய்தி உனக்கு மேலும் அதிர்ச்சியைத் தரும் ஆனாலும் எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை. இங்குள்ள நிலைமைகள் உனக்குத் தெரியும். முன்பு நீ சொல்வாய் வெளியே போகாதீங்க என்று இப்போ நீ சொல்லாவிட்டாலும் 'பங்கரை' விட்டு எங்களால் வெளியே வர முடியாது அண்ணா ஒவ்வொரு நாளும் எத்தனை பேர் சாகிறார்கள். எங்கள் வீடும் எப்போ இடிந்து விழும் என்று எமக்கே தெரியாது. இவைகளைப் பார்த்து எம்மால் எப்படி இருக்க முடியும். வீட்டில் இருந்தாலும் 'ஷெல்' விழுந்து சாகமாட்டோம் என்று என்ன நிச்சயம். எங்கள் வாழ்க்கையே கேள்விக்குறியாக இருக்கிறது. நாளை எப்படி விடியும் என்று ஒவ்வொருவர் மனதிலும் ஏக்கம். ஒவ்வொரு பெண்களும் கையில் ஆயுதங்கள் கொண்டு போகும் போது எங்களால் சும்மா இருக்க முடியவில்லை. நாங்களும் இயக்கத்துக்குப் போகிறோம் எங்களை மன்னித்துவிடு.

இப்படிக்கு
அன்பின்
தங்கைமார்.

"உங்களுக்கு நான் என்ன குறை வைச்சேன். முப்பத்தாறு வயது வரையும் கல்யாணம் கூடச் செய்யாமல் உங்களுக்காக உழைச்சேனே அது குற்றமா". நான் முழுக்கப் 'பசிக்குது' 'பசிக்குது' என்று ஏதாவது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாப்பிட்டுக்கொண்டே இருக்கும் மூத்த தங்கச்சியை நினைத்தான். சாப்பிட்டுக் கோப்பை கழுவும்போதும் "பசிக்குது அண்ணா" என்று பகிடியாகச் சொல்லுவாள். அவளை நினைக்கும் போது மனதுக்குள் ஏதோ செய்தது. அவளை அவனுக்கு மிகவும் பிடிக்கும். சரியான துடுக்குக்காரி. ஆனால் இளைய தங்கச்சி எந்த நேரமும் புத்தகமும் கையுமாக இருக்கும் இளைய தங்கச்சி நீயுமா......!

அம்மா நீ என்ன செய்கிறாய் நீ இப்பவும் உயிரோடு இருக்கிறாயா. என்னாலேயே இதைத் தாங்க முடியவில்லை. நீ எப்படித் தாங்கிறாய். அப்பா செத்தபோது சொன்னாய் "நான் வாழுறது இந்தப் பிள்ளைகளுக்காகத்தான்" என்று இப்போ என்ன செய்கிறாய். உன்ர நகை எல்லாத்தையும் வித்து போய் உழைச்சு தங்கச்சிக்கு சீதனம் கொடு என்று அனுப்பினாயே நீ என்ன செய்கிறாய். நீ சாப்பிடாமல் கிடந்து எங்களை வளர்த்தாயே உன்னை இப்போ யார் பார்ப்பினம்.

"இனி யார் இருப்பார்கள் எல்லோருமே போய் விடுவார்களோ, நான் திரும்பிப் போகும்போது யார் இருக்கப் போகிறார்கள், இனி யாருக்காக வாழுவேனும்" யோசிக்க யோசிக்க மண்டைக்குள் ஏதோ செய்தது. இன்னும் கொஞ்ச நேரம் கிடந்தால் சத்தம் போட்டு குளறிவிடுவான் போலிருந்தது. எழுந்தான். இரவு குடித்தது இப்போ வயிற்றுக்குள் ஏதோ செய்தது. வெற்றை மடித்துப் போட முடியவில்லை. நடுங்கியது. குடிக்காவிட்டால் நிச்சயமாக நடக்க முடியாது. நேற்றுப் போட்ட உடுப்புக்களை போட்டுக் கொண்டு "றெஸ்ரோறண்ட்"ஐ நோக்கி நடந்தான். அப்போது டாக்டர் சொன்னது எதுவுமே அவனுக்கு நினைவில்லை.

-0-



www.tamilarangam.net



# என்று மடியும் எங்கள்.......

மேற்கு ஜேர்மனியில் இருந்து சுமார் 4 மணிக்கு சூரிச் புகையிரத நிலையத்தை வந்தடைந்தேன். பிரயாணக் களைப்பு பிழிந்து போட்டது போல் உடம்பு அலுப்புக் கொண்டது. Bern செல்லும் ரெயினுக்கு இன்னும் 45 நிமிடங்கள் காத்திருக்க வேண்டும். கோப்பி ஒன்று அருந்தினால் நல்லாகத்தான் இருக்கும். Restau-RANT ஒன்றிற்குள் நுழைந்தேன் வசதியாக மூலையில் உள்ள மேசையொன்று வெறுமையாக இருந்தது. ஒரு கதிரையில் பிரயாண பாக்கை வைத்துச் சுமையைக் குறைத்துவிட்டு, மறுபக்கக் கதிரையில் அமர்ந்து கொண்டேன். சேர்விஸ் வந்ததும் கபே [cafe] ஒன்றுக்கு ஓடர் கொடுத்து விட்டு இறுதியாக வந்த சிங்களப் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தேன்.

பத்திரிகையைப் படிப்பதற்குள் வெள்ளை முகம் ஒன்று புன்முறுவலுடன் கொச்சைத் தமிழில் 'வணக்கம்' என்றது. எங்கள் பெடியளுடன் வேலை செய்யும் அனேக வெள்ளையர்கள் ஓரிரு தமிழ்ச் சொற்களை அறிந்து வைத்திருப்பதனால் எனக்கு ஆச்சரியமாக இருக்கவில்லை. நானும் 'வணக்கம்' என்றேன். என்னையே அறிந்தவர் போன்று 'ஹலோ' என்று கையும் தந்தார். நானும் கைகொடுத்து பதிலுக்கு முறுவலித்தேன் அருகில் அமர்ந்து கொண்டார்

"Bist du TAmile" [நீ தமிழனா] என்று சம்பாஷிக்கத் தொடங்கினார்.

"JA, JA, Ich bin TAmile" ஆம் ஆம் நான் தமிழன்தான் என்று சற்று அலட்சியமாக இழுத்தேன் ஆனால் மனிசன் விட்டபாடில்லை

www.tamilarangam.net


"kommst du von Jaffna"? [உனது இடம் யாழ்ப்பாணமா ?]
"JA". ஆம் என்றேன்

சேர்வில் எனக்குக் கோப்பியை கொடுத்து விட்டு அவளுக்கு வேண்டியதை கேட்டுச் சென்றான் மீண்டும் என் பக்கம் திரும்பிய இவன் ........

In Jaffna wo [யாழ்ப்பாணத்தில் எவ்விடம்]

Point Petro [பருத்தித்துறை] கோப்பியைக் குடித்த வண்ணம் உரையாடலைத் தொடர்ந்தேன். பருத்தித்துறை தான் எனது சொந்த இடம் என்று கூறிய பின்புதான்....... என்னை ஆச்சரியப் படுத்திய சிரிக்கக்கூடிய ஒருவிதமான சில தமிழ்ப் பதங்கள் அவ் வெள்ளையரின் வாயில் இருந்து உதிர்ந்தன.

"Point Pedro; alles Pallan, nalavan, und karaiyan. keine vellalan" [பருத்தித்துறை; எல்லாரும் பள்ளர், நளவர், கரையார். வெள்ளாளன் இல்லை]

"Du Pallan; - keine karaiyan".

நீ பள்ளனா? கரையான் இல்லையா என்று கேட்டது போல் இருந்தது.

"பள்ளன் குரங்கு" என்று வெள்ளையன் கொச்சைத் தமிழில் கூறிக் கொண்டே மரமேறும் சைகையை விரல்களினால் காட்டினான்.

"wo gelernt du" [தமிழெல்லாம் நீ எங்கு கற்றுக் கொண்டாய்] பொறுத்திருக்காமலேயே கேட்டேன்

"andere Tamil kolleg gesagt -
Er nicht gut"

[வேறொரு தமிழ் நண்பன் கூறினான். அவன் சரியில்லாதவன்]

சாதி பாகுபாடு பற்றிக் கதைப்பதெல்லாம்

www.tamilarangam.net



நற்செயலல்ல என்பதை இவன் உணர்ந்திருப்பதை என் உள்ளம் ஒரு கணம் மதிப்பீடு செய்தது.

வார்த்தைகளை அடுக்கிச் சென்றவன் இறுதியாக "er ist Sakkiliparayan" [அவன் சக்கிலியபறையன்] என்றதும் நான் மீண்டும் அதிர்ந்து போனேன்.

சிரிக்க வேண்டாம் ........

கோப்பி குடித்ததனால் என்று கூறுவதை விட இவனது உரையாடலினால் எனது உடல் அலுப்பில் இருந்து விடுபட்டது. மனித நேயம் பற்றிய சிந்தனைகளுடன் என் நரம்புத் தொகுதிகள் விறுவிறுப்படைந்தன. நேரத்தை பார்த்தேன் றெயினுக்கு இன்னும் 7 நிமிடங்கள்தான் இருந்தது தற்காலிகமாக 'சிங்கர்' மறந்தது. சேர்விஸ்ஸை [service] வரவைத்து காசைக் கொடுத்து விட்டு, பிரயாண பாக்கை எடுத்துத் தோளில் போட்டு அவ் வெள்ளையனிடம் மீண்டும் சந்திக்கிறேன் என்று டொச்சில் கூறிவிட்டு றெயினை நோக்கிப் புறப்பட்டேன். அப்போதுதான் றெயின் வந்திருந்ததால் கஷ்டமின்றி பாக்கை மேலே வைத்து யன்னல் ஓரமாக அமர்ந்து கொண்டேன்.

மீண்டும் சிங்கர் பத்திரிகையைப் படிப்பதற்காக விரித்தேன் கட்புலன் நுனிப்புல் மேய்வது போல் பத்திரிகையை மேய்ந்தது. ஆனால் என் எண்ண அலைகள் அவ் வெள்ளைக்காரனையே சுற்றிச் சுற்றி வந்தது.

தன்பல்லைக் குத்தி பிறர் மணக்கக் கொடுப்பது போல், எங்கள் சுயப் பலவீனங்களை எல்லாம் வெள்ளைக்காரருக்குச் சொல்லிக் கொடுக்கிறார்களே!

இதென்ன ஒரு திட்டமிட்ட செயலா? அல்லது

www.tamilarangam.net



சாதாரணமாக "காலை வணக்கத்திற்கு உங்கள் மொழியில் எப்படிச் சொல்வது" என்று ஒரு அந்நியன் கேட்டால் ஒரு ஆபாச [தூஷண] வார்த்தையைச் சொல்லி கொடுப்பது [ஐரோப்பில் அநேகமானோர் இப்படிச் செய்கிறார்கள்] போன்ற செய்கை செயலா இது ---------? என்று உள்ளூறக் கொண்டிருந்த என் மனம் உறுதியாகச் சொன்னது. "எப்படிச் செய்தாலும் இது ஒரு ஈனச்செயல் தான் சந்தேகமில்லை" என்று.

மனித சமூகம் தொழில்ரீதியில் வெவ்வேறு சமூகக் குழுக்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்தது. இதில் மேன்மை பெற்ற சமூகம் ஏனைய சமூகக் குழுக்களை ஒடுக்கித் தாழ்த்தியது. தொடர்ச்சியாகத் தாழ்த்தப்பட்டதன் விளைவாக பொருளாதார முன்னேற்றம் முதல் கல்வி வரை அச்சமூகங்கள் பின்னிலையை அடைந்தன அல்லது பிற்படுத்தப்பட்டன அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் ஆனார்கள்.

மாறாக இந்துமத வர்ணாச்சிரம [அ] தர்மம் கூறுவது போன்று எவரும் பிறப்பால் குறைந்தவராகப் பிறந்ததில்லை. இந்துமத வர்ணாச்சிரம [அ] தர்மத்தின்படி பார்ப்போமானால் பிராமணர்கள் தவிர நாம் அனைவருமே 'சூத்திரர்கள்' என்ற குறைந்த சாதிப் பிரிவினர்க்குள் அடங்குவோம். மும் மூர்த்திகளில் ஒருவரான பிரம்மனின் கால்களில் பிறந்தவர்கள் நாம். இப்படியாக எனது சிந்தனை ஓடை நிலத்திற் சென்று கொண்டிருந்த போது எனது இதயத்தின் மூலையில் இருந்து ஓர் குரல் ஒலித்தது. ஐயோ! எங்கள் மண்ணில் யார், யார் செல்களுடன் கூடிய படையின் அடியில் மரித்தனரோ என்று எங்கும் அவலச் சூழ்நிலையில்; இச் சூழலின் நீட்சிக்காக ஒன்றிணையும் இவ் வேளை

www.tamilarangam.net



யிலும் சாதியப் பிரச்சனைகள் பற்றிய யோசனைக்குப் நிமிடங் கள் செலவாகின்றனவே' என்று.

ஒரு வருடத்திற்கு முன் கனடாவிலும் சில மாதங்களுக்கு முன் சூரிச்சிலும் அண்மையில் லுசேர்ன் என்ற இடத்திலும் சாதிக் கதைகளால் ஏற்பட்ட சலசலப்பு கள் பற்றி ஏற்கனவே நண்பன் கூறியதும் என் நினைவுக்கு வந்தது. ஆட்களைத் தெரியாமல் மனித நேயத்தின் அடிப்ப டையில் பழகிய சில குடும்பங்கள் சாதியை அறிந்து உறவை முறித் துக் கொள்கிற சம்பவங்கள் கூட ஐரோப்பாவில், மற்றவர் மனதை புண்படுத்தும் தமிழர் பண்பாட்டில் சில நிகழ்வுகள்.

எமது மண்ணில் இருந்து சுமார் 8000 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து வந்திருக்கிறோம். புவியல் அமை ப்பில் மட்டுமின்றி சமுதாய ரீதியிலும் ஒரு வித்தியாசமான சூழ லுக்குள் நம்மை ஆட்படுத்தியிருக்கிறோம். ஒப்பீட்டளவில் சமு தாய முன்னேற்றத்திற்கு அவசியமான நற்பண்புகளையும் இவ் வே று பட்ட சமூகத்தில் பார்க்கிறோம்.

கோப்பை கழுவுதல், உடுப்பு தோய்த்தல் - அயன் பண்ணுதல் கக்கூசு கழுவுதல் வரையிலான சகல தொழில் லும் கல்வி சாதி வேறுபாடின்றி எம்மை ஈடுபடுத்தியிருக்கின்றோ ம். எப்படி? ஏன் முடிவெட்டும் தொழிலை நாம் விரும்பினால் கூட இங்கு செய்யப்படாது அதற்கான கல்விச் சான்று இங்கு அவசியம்] எந்தத் தொழிலைச் செய்தாலும் அவன் மனிதனாக மதிக்கப்படுகின்ற நற்பண்பை, தினம் தினம் காண்கின்றோம் மரு த்து ஆஸ்பத்திரிக்கோ, டாக்டரிடமோ சென்றால் ....டாக்ட ரே நேரில் வந்து கை கொடுத்து நோயாளியை அழைத்துச் செல்வது இங்கு சாதாரண நிகழ்வு. கல்வி நிலையங்களில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆசிரியரும் - மாணவரும் வேலைத்தலங்களில் மேல் பிரிவின
ரும் சமமாக பழகுவதை காண்கிறோம் அலுவலகங்களில் தெரிந்
த அறிந்த முகம் என்ற வேறுபாடு இன்றி இழுத்தடிக்கப்படா
மல் எமது அலுவல்களை நாமே முடித்துக் கொள்கிறோம். ஆங்
காங்கே இடைக்கிடை நிறவெறியின் செயல்பாடுகள் மேலோங்கிவிட்
ட போதும் நாம் இன்றும் இங்கு தொடர்ந்து வாழ்வதற்
கான காரணங்கள் இச்சமூகத்தில் இருக்கும் மேற்கூறிய நற்
பண்புகள்!

"இந்த நற்பண்புகளின் பகுதியளவையாவது
நாம் ஏன் உள்வாங்கிக் கொள்ளக்கூடாது இதை ஏன் எம்மவர்
கள் புரிந்து கொள்கிறார்கள் இல்லை?' அநேக நேரமாக
என் மனதைக் குடைந்து கொண்டிருந்த கேள்வியினூடே
பழமொழி ஒன்று நினைவுக்கு வந்தது. மலருடன் சேர்ந்த
நாரும் நறுமணம் கொண்டு வீசும். இது தமிழில் ஒரு சிறந்
த பழமொழி. சூழலின் இயல்புக்கேற்ப தம்மை மாற்றிக் கொ
ள்வது உயிர்களுக்குரிய இயற்கை நியதியும் கூட. தொடர்
ந்து என் உள்ளத்தில் ஓர் உரையாடல்.

"எம்மவர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்கள் உயிரினத்தி
ல் இருந்து வேறுபட்டவர்களா?"
சரி சாதிப் பிரிவினைதான் பிற சமூகத்துடன்
சம்பந்தப்பட்ட பிரச்சனை ஆனால் பெண்களுடைய
அதாவது சொந்த மனைவியின் பிரச்சனையில்
எப்படி நடக்கிறார்கள் ஓரளவாவது சரிநிகராகப்
பேசுகிறார்களா?"

"இல்லை" ஓ! பழைய 'சரிநிகர்' என்று என் சிந்தனைக்கு
வருகிறது. சாதியின் பெயரால் EPRLF இயக்கத்தை அழை

www.tamilarangam.net



பேசும் EP யின் துரோகச் செயல்களை சாதிக்கு ஒப்பிடுவது மான மனநிலையை யாழ்ப்பாணத்துப் பனங்கொட்டைச் சமூகத்திற்குரிய பண்பாடு என்று வர்ணித்தது 'சரிநிகர்'

ஐரோப்பிய அனுபவத்தையும் சேர்த்துக் கூட்டிப், பெருக்கிக், கழித்துப் பார்க்கும் போது இது பனங் கொட்டைச் சமூகத்துக்குரிய பண்பல்ல, பன்னாடை [கள்ளு வடிக்கும்]ச் சமூகத்திற்குரிய பண்பாடு என்றே பார்க்கத் தோன்றுகிறது.

தமிழ் சமூகத்தில் புரையோடிப் போன நிலவுடைமையின் இழிவுக் கலாச்சாரங்களையும், ஐரோப்பாவில் காணப்படும் சீரழிவுக் கலாச்சாரத்தையும் மட்டும் வேகமாக உறிஞ்சிக் கொள்ளும், இவரை எவ்வாறு அழைக்கலாம்?

புகையிரதம் தனது வேகத்தைக் குறைத்துக் கொண்டது. யன்னல் வழியாகப் பார்க்கிறேன். பேர்ன் நகரை அடைந்து விட்டதை பெயர்ப் பலகைகள் காட்டின எனது உள்ளம் ஒன்றை மட்டும் உறுதியாக கூறிக் கொண்டது.

தமிழ் இனத்தை ஒடுக்கி விட்டு சிங்கள இனம் நிம்மதியை இழந்திருப்பது போலத்தான் ஆயிரம் போராட்டங்களை நிகழ்த்தினாலும், தனது இனத்துள் இருக்கும் ஒரு பகுதி மக்களை தாழ்த்திவிட்டு தமிழ் இனம் நிம்மதி பெறப் போவதில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான ஒடுக்கு முறையும் பெண்கள் மீதான அடக்கு முறையும் தகர்ந்து போகும் வரை தமிழ் இனத்தின் விடுதலை என்பது......?

ரெயின் நின்றது. சரிநிகரை மடிக்க விரும்பவில்லை பாதிகைத் தூக்கி தோளில் மாட்டிக் கொண்டு ரெயினை விட்டு இறங்கினேன். 'சரிநிகர்' விழிப்பாய்த் தெரிய நான் நடந்து கொண்டிருக்கிறேன்.

வீ. லோகதாசன்.

www.tamilarangam.net



# அகதிகள் உருவாக்கமும் அடிப்படை உண்மைகளும்

• தேவா

«சென்ற இதழில்.... எங்கோ இருக்கும் முதலாளிகள் எப்படி ஏழை நாடுகளின் மக்களை அனாதைகளாக்கினார்கள் என்பதைப் பார்த்தோம். இனி......»

ஒவ்வொரு ஏழை நாடுகளிலும் தங்களுக்கென்று ஒரு வலுவான தளத்தை ஆரம்ப காலம் முதல் அமைத்துக் கொண்ட இவர்கள் அந்த தளத்தின் உறுதியின் மேல் நாடுகளை 'அபிவிருத்தி' அடையச் செய்யும் பணியை ஆரம்பித்தார்கள். "அபிவிருத்திக்கு பணமில்லையா? கவலையில்லை நாங்கள் எல்லாவற்றையும் வெகுவாக சிந்தித்து தான் முடிவெடுத்துள்ளோம். உங்களுக்கு கடன் தருகின்றோம்." ஐயோ எங்களுக்கு கடன் வேண்டாம் என்று ஆரம்பத்தில் சிறிது பின்னடித்துக் கொண்ட நாடுகளை உதாரணங்கள் மூலம் திருப்திப்படுத்தினார்கள். அமெரிக்காவைப்பார்! அதனது தேசியக்கடன் இரண்டு மில்லியன் டொலர். சர்வதேச பல்நாட்டுக் கம்பனிகளைப்பார்! எல்லாமே கடனில் தான் ஓடுகின்றன. அபிவிருத்திக்கு கடன் இன்றியமையாததுடன், கடனில்லாமல் நவீன பொருளாதாரத்தில் எந்த நாடும், பல்நாட்டுக் கம்பனிகளும் அபிவிருத்தியை பெருக்கிக் கொள்ளவில்லை." இதனைப் பார்த்து "அபிவிருத்திக்காக நானும் கடன் வாங்குகிறேன்" என்று பொறிக்குள் நன்றாகவே சிக்கிக் கொண்டன ஏழை நாடுகள்.

கடனைக் கொடுத்த நிறுவனங்கள் அதற்கான வேலைத் திட்டங்களையும் வைத்தன. இதனால் ஒவ்வொரு உள்நாட்டு சமூக பொருளாதார அமைப்புகளும் மேலும் பலவீனப்பட்டதுடன்

www.tamilarangam.net



விவசாய உற்பத்தியும் பலப்படுத்தப்படாமல், பெருந் தொழிலும் சீராக நிர்வகிக்கப்படாமல் முடங்கியது. அப்படி தவறி ஏதும் 'மிஞ்சி' நடந்தால் அவ்வுற்பத்தியின் விலை நிர்ணயத்தை உலக சந்தை கவனித்துக் கொள்ளும். ஆக மொத்தத்தில் சர்வமும் நாசமே என்ற நிலைமையை மேற்குலக தொழில் அபிவிருத்தி அடைந்த பணக்கார நாடுகள் நிர்ணயித்துக் கொண்டன.

இதே வேளை; விவசாயி இந்த துறையில் விவசாயக் கூலியாகி பின்பு தொழிற்சாலையில் கூலியாகி மொத்தத்தில் காலப் போக்கில் எந்த வித சுய பெறுமானமுமில்லாத தங்கியிருக்கும் மனிதனாக மாறுகிறான். மற்றைய பாரம்பரிய தொழிலாளர்களும் இதே பாதையில் பயணத்தை தொடர்ந்து பூச்சியத்தை எட்டுகின்றனர்.

கடன் கொடுத்த நிறுவனங்கள் தங்கள் வட்டிகளை வசூலித்தால் மாத்திரம் போதுமென்ற நிலைமை வரை வந்து அதுவும் இல்லையென்றன போது மேலும் உதவிகளை வழங்கித் தங்களின் நிலைகளைத் தக்க வைத்துக் கொள்ள முயலுகின்றனர்.

அபிவிருத்திப் பணம் அந்நாட்டின் புவியியல், இயற்கை மூலப் பொருட்கள் செறிவை கருத்திற் கொள்ளா திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுவதாலும்; அன்றேல் அந்நாட்டை ஆளுபவர்கள் அப் பணத்தை மீண்டும் மேற்குலக நாடுகளில் தங்கள் சொந்தப் பெயர்களில் வரவு வைத்துக் கொள்வதாலும் நாட்டின் தேவையற்ற ஆடம்பரங்களுக்கு செலவிடுவதாலும் நிலைமை இன்னும் மோசமடைந்தது. மீண்டும் மேற்குலகம் கடன்களைக் கொடுத்ததுடன், புதிய திட்டங்களுடன் அந் நாட்டு மக்களின் உணவு, வாழ்நிலை, சுகாதார வசதிகள் போன்ற சமூகத் தேவைகளுக்கான செலவினங்களை சுருக்கிக் கொள்ளப் பணித்தன. இவ்வாறான நடவடிக்கைகளால் உள் நாடுகளில் விலைவாசி ஏற்றம், நுகர் திறன் வீழ்ச்சி என்பன உருவாகி அத்தியா

www.tamilarangam.net



வசிய அடிப்படை உணவுப் பொருட்களுக்கான தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலை உருவாகியது.

இங்கு உள்நாட்டுக் குழப்பங்கள் பிராந்தியப் போர்கள் என்பன உருவாகுவதற்கான காரணங்கள் விதைக்கப்பட; ஆட்சியாளர்கள் ஆயுத பலத்தை பெருக்க மீண்டும் கடன்களைப் பெற வேண்டி யாசகத்தில் இறங்கினர். இது மேலும் வளர்ச்சியடைந்து உள்நாட்டு போராக பரிணமித்து மக்களை அகதிகளாகப் புலம் பெயரச் செய்தது. மொத்தத்தில் உணவிற்கு கடன் கொடுக்காத வங்கிகளும், கடன் கொடுக்கும் நிறுவனங்களும் ஆயுதங்களுக்கு கடன் கொடுத்து நிலைமையை மேலும் தீவிரமடையச் செய்தன. மேற்குலகின் சுயலாபப் பேராவலில் பரிணமித்தவர்கள் தான் அகதிகள். மேற்குலகத்திற்கு துணை போனார்கள் உள்நாட்டு ஆட்சியாளர்கள். மூன்றாவது உலகம் (ஏழைநாடுகள், அபிவிருத்தி அடையும் நாடுகள்) என்ற பசுவிடம் பாலை மாத்திரம் கறந்து கொண்டிருந்தது மேற்குலகம்; ஆனால் பசு பால் கொடுப்பதை நிறுத்தி விடுமென்ற நிலைமாற செத்தும் விடாமல் அகதியாக மாற வேண்டிக் கொள்ளலவில்லை வருகிறது.

உணவுப் பயிர்களுக்கீடாக காசுப் பயிர்களை வளர்த்த நாடுகள்; இயற்கையையும் அழிக்கத் தொடங்கி, காடுகளை வெட்டிச் சாய்த்து மரங்களை வியாபாரித்து கால நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தின. "கத்தரிக்காய் இப்படிச் சூம்பியிருக்க கூடாது அழகாக பெரிதாக மொழு மொழுவென்றிருக்க வேண்டும்" என மேற்கான் கூற அதனையும் இந் நாடுகள் நம்பின. இந்தா பிடி நவீன பசளைகள், கிருமி நாசினிகள், பூச்சி கொல்லிகள் என்று அனைத்தையும் இந்நாடுகள் மத்தியில் வியாபாரமாக்கிக் கொள்ள இவைகளைப்பாவித்து மொழு மொழு கத்தரிக்காயை உருவாக்கிய நாடுகள்; காலப் போக்கில் நிலம் நஞ்சடைந்து உற்பத்தி திறனை இழந்து விளைச்சல் இல்லாமல் கத்தரிக்காயே இல்லாத நிலைக்கு தள்ளப்பட்டன. இத்தகை நிலைமையில்

உணவுத் தேவையை அந்நாட்டு அரசும் கவனிக்காமல் விட; வரட்சி, இயற்கை அழிவுகளினால் தங்கள் பாரம்பரிய பூமியை விட்டுத் தொழில் தேட, உணவு தேடி வேறு இடங்களுக்கு அகதிகளாக குடி பெயர்கிறார்கள். இங்கும் அகதிகளை இவை நோக்கே உருவாக்கி விட்டது.

உலக மக்கள் தொகையின் அதிகரிப்பு விகிதத்தில் உலக மொத்த உணவுப் பொருள் விளைவிலும், விநியோகத்திலும் சமன் இல்லாத நிலையால் சில நாடுகளில் தேவைக்கதிகமான உணவுப் பொருட்களும் உலகின் பெரும்பாலான நாடுகளில் அடிப்படை உணவும் இல்லாத நிலை உருவாகி மக்கள் உணவுக்காக அகதிகளாகும் தன்மையும் மிகத் தீவிரமாகவே வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அகதிகளின் உருவாக்கத்திற்கான பொருளாதார, சமூக, அரசியல் காரணங்கள் மாத்திரம் அகதியை நிர்ணயிக்கவில்லை. இயற்கை அழிவுகளான வரட்சி, பூமியதிர்ச்சி, வெள்ளம், புயல் போன்றனவும் மக்களை அகதிகளாக்கின்றன. ஆனால் மேற்குலக நாடுகளின் புதிய மதமான உதவி இவர்களுக்கு வழங்கப்படுகிறது. உதவி செய்வதில் எந்தவிதமான பிழையுமில்லை. இவ்வாறன பேரழிவுகளின் போது ஆரம்ப உதவிகளை அந்நாடோ அல்லது பிற நாடுகளோ செய்வதில் தவறில்லை ஆனால் தங்கியிருக்கும் மனோ நிலையை வளர்த்துக் கொண்ட இம் மக்கள் வானத்தில் இருந்து விழுந்த இந்த உதவியையே நிலையாக நம்பி தங்கள் முயற்சியில் தங்கள் சமூகத்திற்கு விடிவைத் தேடாமல் அகதிகள் முகாம் சமுதாயத்தை உருவாக்கி கொள்கிறார்கள்; அன்றேல் மேற்குலக, உள்நாட்டு ஆட்சியாளர்களின் கூட்டில் உருவாகும் மறுவாழ்வுத் திட்டங்களில் [சமூக, புவியல் நிலைக்குப் பொருந்தாத] பங்கேற்பதுடன்; பொறுப்புணர்வு இல்லாமல் ஏனோ தானோ என்று வாழ்வை ஓட்டுவதால் அகதிகளாகவே வாழ்ந்து மடியும் நிலைக்கு தங்களைத் தாழ்த்திக் கொள்கிறார்கள். இவ்வாறான சமுதாயம் நாட்டின் ஏனைய சமூகத்தினர் மத்தியில் தாழ்வாக கருதப்படுவதுடன், தங்களது சுய ஆன்மீக பலத்தை இழந்தவர்களாக காணப்

www.tamilarangam.net



படுகிறார்கள். சமுதாயவளர்ச்சியில் தங்கள் சுய முன்னேற்றத்தில்; எந்த விதமான மாற்றங்களையும் ஏற்படுத்த விரும்பாமல்; அரசியல் ஈடுபாடு எதுவுமே இல்லாதவர்களாய் நாட்டின் சனத் தொகையின் எண்ணிக் கணக்காக மட்டும் இருந்து விடுகிறார்கள். இச் சமூகத்தின் சிந்தனை வளர்வு அறவே இல்லாது போய்விடுகிறது. தங்கள் சொந்த நாட்டில் அகதிகளாக மட்டுமல்லாது மூன்றாம் தரப் பிரஜைகளாக தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்கிறார்கள்.

மேற்குலக நாட்டு வங்கிகளினதும் கடன் கொடுக்கும் நிறுவனங்களினதும் பாரமரிப்பில் நிலை குலைந்தது ஏழைநாடுகளின் பொருளாதாரம் மாத்திரமல்ல ஐரோப்பிய 'விஞ்ஞான' பூர்வமான இலாப நோக்கு சிந்தனையும் தான். வளர்ச்சிப்பாதையில் ஏழை நாடுகளை இட்டுச் செல்வதாக நம்பச் செய்து; 'கடன்,' 'உதவி' வழங்கி, இக்கடன்களையே திரும்ப பெற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு ஏழைநாடுகளை முற்றாக சீர்குலைத்ததுடன்; பல சமூகப் பிரச்சனைகளை பிறப்பித்தனர். இன்று தங்களது நாட்டிலேயே பல பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்கும் காலகட்டத்தில், கைகளை பிசைந்து கொள்ளும் இந்நேரத்தில் அகதிகள் பிரச்சனை பூதாகரமாகி அவர்களது வாசலைத் தட்டுவதைக் கண்டு நிலைகுலைந்து விட்டனர். தங்கள் சொந்த நாட்டில் அகதிகளாக வாழும் மக்களுடனும் அண்டை நாடுகளில் அகதிகளாகக் குடி பெயர்ந்தவர்களுடனும் ஒப்பிடுகையில் மேலைநாடுகளுக்கு அகதிகளாக குடி பெயர்ந்தோர் தொகை மிகக் குறைவே. ஆனாலும் பிரச்சனையின் வளர்ச்சியைக் கண்டு கதிகலங்கும் இவர்கள் எல்லைகளை இறுக மூடத்தான் முனைகிறார்கள். மேற்குலகத்தினர் மனித நேயத்தில் சிறந்தவர்களாக காட்டிக் கொள்ள தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்ட அகதிகள் தொகை கூடுவதை கண்டு மிரண்டு விட்டனர். ஏனைய நாடுகளில் அகதிகள் பிரச்சனைக்கு மனித நேயத் தூதுவனாக நேசக் கரங்களை நீட்டியவர்கள், உதவி

www.tamilarangam.net



வழங்கியவர்கள் தாங்கள் நாட்டினுள் அகதிகள் வருவதையும் வாழ்வதையும் விரும்பவில்லை.

பிரச்சனைகளை சந்தித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நாடுகளும்; அடிப்படை மனித இனங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் மனிதனென்ற உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கவும், தாங்கள் அகதிப் பிரச்சனையைத் தாங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளவும் தவறின. தனது சொந்த நாட்டுக் குடிமகனை அந்நாட்டவனாக மதிக்காததுடன், மனிதனாகக் கூட கணிக்கத் தவறின. எதற்கும் மேற்கை அண்ணாந்து பார்த்ப் பழகிய மக்கள் இப்பிரச்சனைகளின் விடிவாக மேற்கை எட்டிவிட நினைக்கின்றனர். இத்தகைய நிலைமைதான் ஐரோப்பிய நாடுகளில் அகதிகள் பெருக்க முக்கிய காரணியாக அமைகிறது. தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொரு மனிதனின் குடிபெயர்வுக்கும் ஒரு தகுந்த காரணமிருக்கின்றது. தனது வேர்களை விட்டு சமூகம், கலாச்சாரத் தொடர்புகளை அறுத்துக் கொண்டு ஏதோ ஒருவகைச் சுதந்திரத்துக்காக மேற்கே வரும் ஒருவன்; அதனை எட்டி தனது வாழ்வை மீளமைத்துக் கொள்கிறன். அவனது சொந்த நாட்டில் இல்லாத சுதந்திரம் இங்கு இருக்கின்றதுதான் ஆனால் அதற்காக என்னவெல்லாவற்றையும் இழக்க நேர்கின்றது. சொந்த நாட்டு கெடு-பிடி இங்கு இல்லை ஆனால் எண்ணற்ற வேறு கெடுபிடிகள், மாற்றங்களைச் சந்திக்க நேர்கின்றது. இவற்றையெல்லாம் மீளாய்வு செய்யும் போது "அங்கும் சுதந்திரம் இல்லை அண்டையவிடத்திலும் சுதந்திரம் இல்லை என்கிறா ஒரு நாள் நாடு திரும்ப வேண்டும்" என்ற எண்ணம் அடிக்கடி நீண்ட கால அகதிகளின் மனதில் தோன்றாமலுமில்லை. மேலைநாட்டின், சொந்த நாட்டின் நிர்வாகம் மாத்திரமல்ல அகதிகள் கூட தாங்கள் இந் நிலையில் இருந்து விடுபட என்ன செய்ய வேண்டும் எத்தகைய தீர்வைத் தேட வேண்டும் என ஆராய்தல் வேண்டும். எங்களது பிரச்சனைகளுக்கு நாங்களே தீர்வு காண வேண்டும். சொந்த தீர்வைவிட பிரச்சனையி

www.tamilarangam.net



நேரமையாத தொடர்பில்லாதவர்களது தீர்வு பகுதித் தீர்வாகுமே தவிர முழுமையான தீர்வாகாது என அநுபவங்கள் அகதிகள் பிரச்சனை சார்பாக காட்டுகின்றன.

அரசியல் காரணிகளின் தூண்டுதலால், உள்நாட்டு குழப்பங்களால், அண்டை நாடுகளுடனான குழப்பங்களால் வெளியேறும் அகதிகள் தங்கள் நாட்டில் நடக்கும் எந்தவிதமான மாறுதல்களையும் கண்டு கொள்ளாதிருந்து விடுகிறார்கள். சுயநிறைவில் திருப்திப் பட்டுக் கொள்வதுடன் சமூகம் சார்ந்த சிந்தனை அறவே இல்லாதிருப்பதனால் தங்களைத் தாங்களே அகதிகளாக வாழ் நாள் முழுவதும் நிர்ணயித்துக் கொள்கிறார்கள். சமூக, மனித சிந்தனை வளர்ச்சியில் தங்கள் பங்கை செலுத்த மறுப்பதால் ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் பங்கெடுக்காமல் விடுபட்டு பொருள் சார்ந்த வாழ்க்கையை மாத்திரம் வாழ்பவர்களாக மாறிவிடுகிறார்கள். அச் சமூகத்தின் பிரச்சனைகளில் அரசியலில், கலையில் எந்தப் பங்களிப்புமே செய்யாமல் எல்லோருமே அகதிகளாக ஓடிவருவதால் சமூகத்தின் பிரச்சனையில் தீர்வற்ற நிலை நீடிப்பதோடு; அகதிகளை உருவாக்கிய சக்திகள் நிலை பெற தளம் அமைத்துக் கொள்ள உதவி புரிந்தவர்களாக மாறுகிறார்கள். தங்களது புதிய சமூகத்தில் கூட எதையுமே சாதிக்காது பணம் சேர்க்கும் இயந்திரமயமான வாழ்வை "மகிழ்வுடன்" ஏற்றுக் கொள்கிறார்களா

அகதிகளது பிரச்சனை அகதிகளது பார்வையில் பிரச்சினையாக அலசப்பட வேண்டும் எல்லாப் பரிமாணங்களிலும் இப் பிரச்சனையை கண்டறிய வேண்டும் அகதிகளே இதற்கான தீர்வையும் முன்வைக்க வேண்டும். தங்களது வாழ்வை சொந்த நாட்டில் மீளமைத்துக் கொள்வதற்கான வழிவகைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். இதைவிட்டு கம்யூட்டர் கணிப்பு முறைகளின் சொந்த இலாபம் கருதிய சதுரங்க விளையாட்டின் நகர்த்தும் காய்களாக விடிவை எதிர்பார்ப்பது சரியான தீர்வைத் தரப் போவதில்லை.

www.tamilarangam.net

# மௌன அலைகள்

நீலக் கடலின் அலையைப் போலே
நிதமும் தவிக்கிறேன் அம்மா.
காலும் கையும் வலுவிழந்ததென்று
கேட்ட செவியில் இடிவிழுந்தது.
அடுத்த நாளில் வந்த
அச்சு செய்தியில்
அவலம் தோய்ந்ததால்
உன்னை மறந்தேன்.
உணர்வுகள் இறுக
என்னை மறந்து ஏதோ
திட்டினேன்.
பாலைவனத்தில் பசுந்தரையே
என்னை நகர்த்தினாய்
உணர்வுகள் விலைபோகும்
இந்த நாட்டில்
உணர்வோடு போராடும்
ஒருவனாய் ஆனேன்
உன்னை நினைத்து
உடைந்து போனேன்
பலதடவை
கடலில் எரிமலை வெடித்ததை
கண்டவர் யாரும் இல்லை
நான் சொன்னதும் இல்லை.
அம்மா என்றும் நீ
என் தாய்தான் - நான்
உன் மகனாக மட்டும் இல்லை!

• யதார்த்தன் •

www.tamilarangam.net

